*4*

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

## (3:1–16)

*தனது செய்தி சமீபத்திய தோற்ற மல்ல என்பதை பேதுரு தெளிவாக்கினார். அப்போஸ்தலர்களின் செய்தி அவருடைய வாசகர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்திருந்தது. அவர் எழுதிய சபைகள் சத்தியத்தை அறிந்திருந்தனர்; உண்மையில் அவர்கள் சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தனர் (1:12). பிறகு கள்ளப் போதகர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் சபைகளை துண்டு துண்டாக்கிப் போட்டிருந்தார்கள். சில கிறிஸ்தவர்கள் அவர்களை ஏற்றுக் கொண்டனர் அல்லது குறைந்தபட்சம் சகித்துக் கொண்டிருந்தனர்; மற்றவர்கள் அவர்களுடைய போதனைகளில் சம்பந்தப்பட்டிருந்த கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு அவைகளை புறந்தள்ளியிருந்தார்கள். இந்த நிருபத்தை எழுதுவதற்கு அப்போஸ்தலன் இரண்டு காரணங்களைக் கொண்டிருந்தார்: (1) அவர் (பேதுரு) தமது வாசகர்களை சூழ்நிலைக்கேற்ப தவறாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்ட கள்ளப் போதகர்களை புரிந்து கொள்ள ஏதுவாக்கினார். அதற்கு மேலாக, அவர்கள் அப்போஸ்தலருடைய அடையாளம் காணமுடியாத அளவுக்கு உபதேசத்துடன் ஒத்துப்போய்க் கொண்டிருந்தனர். (2) தமது வாசகர்கள் அழைக்கப்பட்டதன் வல்லமையையும் பரிசுத்தத்தையும் நினைப்பூட்டி அவர்களை உற்சாகப்படுத்த விரும்பினார். அவர் அவர்களை விசுவாசத்தில் கட்டியெழுப்ப விரும்பினார். பேதுரு தம்மிடம் புதிதான செய்தி எதுவுமில்லை என்பதை தெளிவாக்கினார். பேதுரு தம்மிடம் புதிதான செய்தி எதுவுமில்லை என்பதை தெளிவாக்கினார். அவர்களுக்கு நினைப்பூட்டி எழுப்பிவிடுவது அவருடைய நோக்கமாயிருந்தது. அவர்கள் தொடர்ந்து தேவனுடைய ஜனங்களாயிருக்க வேண்டுமானால், அவர்கள் கள்ளப் போதர்களின் போதனையை மறுத்து அப்போஸ்தலர்களிடமிருந்து கற்றுக் கொண்ட செய்தியில் மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாக இருந்தது.*

### *“உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்” (3:1, 2)*

**[1]பிரியமானவர்களே இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். [2]பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த**

*நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்.*

***வசனம் 1. பிரியமானவர்களே*** *என்ற வார்த்தை தொனியில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இந்த நிருபம் கள்ளப் போதகர்களுடன் பணிந்து போகாமல் அவர்களைக் கண்டனம் பண்ணுவதிலிருந்து மனவேற்றுமை களைந்து ஊக்கப்படுத்துதல் வரை நடத்திச் செல்லுகிறது. அப்போஸ்தலன் அவர்களிடம் தான் இப்பொழுது,* ***இரண்டாவது நிருபத்திற்குக்*** *கடந்து வந்ததைக் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ சட்டத்திட்டங்கள் அடங்கிய புத்தகங்கள் அவைகளின் வரிசைப்படி அமைந்து, இன்றைய வாசகர் 1 பேதுரு புத்தகத்தை உடனடியாக நினைத்துக் கொள்ள உதவுகிறது. அவைகளின் தொடர்பு முதல் முறையாக வாசிக்கிற நபர்களுக்கு அவ்வளவு தெளிவுள்ளதாக இருந்திருக்காது. இரண்டு பக்கங்களை (இடதுபுறம்) திருப்பினவுடனே பேதுருவை கண்டுபிடிக்கிற மாதிரி இருக்கவில்லை. மேலும் இன்றைய வாசகர் வாசிக்கும் போது பிரதிபலிக்கும் அதன் விளைவு அப்போஸ்தலன் குறிப்பிட்டது 1 பேதுருவையே என்ற நிச்சயத்திலிருந்து குறைவானதாயிராது. நாம் உறுதியாகச் சொல்ல வேண்டுமானால் இதே கூட்ட ஜனங்களுக்கு பேதுரு இதற்கு முன்பும் ஒரு நிருபத்தை எழுதியிருக்கிறார் எனலாம். அது 1 பேதுருதானா இல்லையா என்பது உறுதியாகத் தெரியாவிட்டாலும் அதுகுறைவான உறுதியாகத்தானிருக்கும்.*

*அப்போஸ்தலன் இந்த நிருபத்தை, 2 பேதுரு புத்தகத்தைக் குறிப்பிடுகையில், முந்தின நிருபத்தைப் போலவே* ***உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்*** *என்று எழுதினார். 2 பேதுருவில், தான் இயேசுவோடு இருந்த நாட்களில் நிகழ்ந்தவைகளை நினைவுகூருகிறார். காமவிகார நடக்கையிலிருந்து அவர்கள் விடுபட வேண்டியதை கர்த்தர் விரும்புகிறார் என நினைப்பூட்டுகிறார். அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் வசப்படுத்திக் கொண்டிருந்த கள்ளப் போதகர்களை ஏற்றுக்கொண்டால் அதினாலே வரும் விளைவுகளை நினைப்பூட்டினார்.*

*பேதுரு ஒரு சிறப்பான ஆவிக்குரிய முன்னோடியாக இருந்தபடியால், அவர் தனது வாசகர் அனைவரையும் ஒரே பிரஷ்ஷால் வண்ணம் தீட்டவில்லை என்பதைத் தெளிவாக்கினார். அவர்களில் அநேகரும் எச்சரிக்கையாயிருந்தனர். அவர்கள் கள்ளப் போதர்களுக்கு எதிர்த்து நின்றனர்; தங்கள் நம்பிக்கைகளிலே நேர்மையாக அவர்கள் இருந்தார்கள். தமது வாசகர்களை பேதுரு உற்சாகப்படுத்த விரும்பினார். அவர் தமது வாசகர்களை நினைப்பூட்டும் செயல் நமக்கு 1:12 ஐ நினைவுபடுத்துகிறது. அப்போஸ்தலன் சரிசம விகித செயல்பாட்டை செயல்படுத்த வேண்டியதாக இருந்தது. ஒரு புறம் தமது கட்டளையில் கள்ளப் போதகர்களுடைய செயல்களை கண்டித்து உணர்த்த விரும்பினார், ஆனால் மறுபுறம் அவர் தமது வாசகர்களுடைய புத்திக்கூர்மையையோ அல்லது நேர்மையையோ அவமதிக்க விரும்பவில்லை.*

*இந்த வசனப்பகுதியிலும் 1:12லும் ஒரு குற்றச்சாட்டு சுட்டிக் காட்டப்படுகிறது. அப்போஸ்தல சாட்சிகள் மூலம் அவருடைய வாசகர்கள் பெற்ற செய்திகள் நினைப்பூட்டப் பட வேண்டியவைகளாயிருந்தன. தனது கடிந்து கொள்ளுதல்களை அவர் மிருதுவாக்கி அவர்கள் "சத்தியத்திலே உறுதிப்பட்டிருப்பதாக" தனது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார் (1:12)*

மேலும் அவர்கள் "உண்மையான மனதையுடைய" வர்களாயிருந்தனர், ஆவிக்குரிய தலைவர்களாயிருக்க விரும்புகிறவர்கள் அப்போஸ்தலனின் அணுகுமுறையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு. ஒட்டுமொத்தமாக எல்லாரையும் கண்டனம் பண்ணுவது விருப்பப்படும் முடிவைக் கொண்டு வராது. ஒருவர் தெளிவாக இருந்து சத்தியத்திற்கென்று நிற்க வேண்டும், ஆனாலும் அவரது நடத்தை ஒரு பெரிய அளவில் சாதித்து தான் விரும்புகிறதை அடைய உதவ வேண்டும்.

***வசனம் 2.*** பேதுரு தொடர்ந்து கள்ளப் போதகர்களின் வார்த்தைகளை சமீபத்தில் அவருடைய வாசகர்கள் பெற்றுக் கொண்டதற்கும் அவர்கள் முதல் முறையாக கேள்விப்பட்ட கிறிஸ்தவ போதகர்களின் செய்திக்குமிடையே இருந்த வேறுபாட்டை காண்பித்தார். **முன் சொன்ன வார்த்தைகளை அவர்கள் நினைவுகூர வேண்டுமென்று** அவர் விரும்பினார். அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த முதல் உபதேசம்,தேவன் தமது **பரிசுத்த தீர்க்கதரிசிகள்** மூலமாய் முன் சொன்ன வார்த்தைகளாயிருந்தன. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள் என்று முன்னமே பேதுரு சொல்லியிருந்தார் (1:21). கூடுதலாக, அப்போஸ்தலர்களிடமிருந்து அவர்கள் கேட்டவைகள் "பரிசுத்த தீர்க்கதரிசிகளைக் கொண்டு" பேசப்பட்டவைகளின் நிறைவேறினவைகளாகும். "தீர்க்கதரிசன முன்னுரைப்புகளை இயேசுவின் கட்டளையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால் அது பழைய ஏற்பாட்டுடன் வைக்கப்பட வேண்டிய அதிகாரமிக்க கிறிஸ்தவ போதனைகள் கட்டப்படத் துவங்கி விட்டன என்பதைக் காட்டுகிறது" என்று Donald Guthrie கவனித்துள்ளார்.[1]

பேதுருவின் வார்த்தை இங்கே கிரேக்கமொழியின்படி கொச்சையாக இருந்தாலும் அர்த்தம் தெளிவாக உள்ளது. நேரடிப் பொருளில் தீர்க்க தரிசிகள் முன் சொன்ன வார்த்தைகள் "உங்கள் அப்போஸ்தலர்களின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகள்." இதன் பொருள் பேதுருவின் வாசகர்கள் அப்போஸ்தலரின் வாயினால் கேட்ட வார்த்தைகள், அவைகள் உண்மையில், கர்த்தராகிய இரட்சகரின் கட்டளைகள். மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் அந்தக் கட்டளைகள் அப்போஸ்தலர்களிடமிருந்து வந்தவைகளாக இருக்கலாம். ஆனால் அப்போஸ்தலர்கள், உண்மையில், கர்த்தரும் இரட்சகருமானவரால் தெரிந்து கொள்ளப்பட்டு அனுப்பப்பட்டவர்கள். இரண்டு பொருளுமே வசனப்பகுதிக்குப் பொருத்தமானவையே, பாராட்டத்தக்க வகையில் ஒன்றுக்கொன்று முரண்படாமல் உள்ளன.

பேதுரு அப்போஸ்தலர்களை **உங்கள் அப்போஸ்தலர்கள்** என்று (ஆங்கிலத்திலும் எங்களுடைய கட்டளைகள் என்று தமிழிலும்) பேதுரு அடையாளப்படுத்துகிறார். அதிலே வெளிப்படையற்ற உள்நோக்கம் எதுவுமில்லை. அவர்கள் கிறிஸ்தலர்களை வைத்து வியாபாரம் பண்ணவில்லை; விசுவாசிகளின் உழைப்பில் அவர்கள் எந்த வித சுய பிரயோஜனத்தையும் அடையவில்லை. அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய மகிமைக் கென்றும் மனுஷருடைய இரட்சிப்புக்குமேயன்றி வேறெந்த காரணத்துக்காகவும் செயல்படவில்லை. அவர்கள் "உங்கள் அப்போஸ்தலர்களாயிருந்தார்கள்." பேதுரு அவசியப்படும் இடங்களில் அப்போஸ்தலர்களுடைய அதிகாரத்தை பயன்படுத்துவார், ஆனால் இங்கே இந்த வேளையில், அப்படியல்ல. இந்த

இடத்தில், பேதுரு தனது வாசகர்களுக்கு நினைப்பூட்டி, அப்போஸ்தலர்கள் அவர்களில் அன்புகூர்ந்து அவர்களுக்கு ஊழியஞ் செய்தார்கள் என்பதை குறிப்பிட விரும்பினார். மற்றொரு புறம், கள்ளப் போதகர்கள், தங்கள் சுய இலாபத்திற்காக அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள் (2:3, 15). இன்னமும், அதிகாரம் எனும் கருத்திற்கு இது பொருத்தமற்றதாயிருக்கிறது. தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளின் அதிகாரத்திலிருந்து, அப்போஸ்தலர்களின் கட்டளைகளையும், இயேசுவின் கட்டளைகளையும், கள்ளப் போதகர்களின் வாழ்க்கை முறை மற்றும் உபதேசங்களோடு ஒப்பிட்டு அதன் வேறுபாடுகளை அவர் காண்பிக்கிறார்.

சத்தியத்தைக் குறித்த கேள்விகள் பிரச்சனையாகும் போது, கள்ளப் போதகர்களின் ஒழுக்க ரீதியான வாழ்க்கை முறைகள் தற்காலிகமாக ஒரு பக்கமாக ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவைகள். கிறிஸ்துவைக் குறித்த உண்மையைக் காணவோ, இரட்சிப்பைக் குறித்த வழியை அறியவோ, அல்லது அவரது சபையைக் குறித்து அறியவோ, கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலிக வழிகாட்டலுக்காக அவர்களுடைய போதனைகளை நோக்கிப் பார்க்கவேண்டும். பேதுரு அப்போஸ்தலர்களை "உங்கள் அப்போஸ்தலர்கள்" என்று அடையாளப்படுத்தினார், ஏனெனில் அவர்களுடைய பிரதான அக்கறையெல்லாம் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிதான். அவர் புறநோக்கு சத்தியத்தை தொகுப்பாக பயன்படுத்தி ஏவப்பட்ட மனுஷர்கள் மூலமாகவும் அப்போஸ்தலர்களுக்கும் வாசகர்களுக்குமிடையேயான தனிப்பட்ட எதிர்ச்செயலாற்றல் மூலமாகவும் செயல்படுத்தினார். தனிப்பட்ட செயலாக்கம் கிறிஸ்தவ தலைமைத்துவத்திலிருந்து பிரிக்கப்படமாட்டாது. நல்ல மேய்ப்பர்களைப்போல, அப்போஸ்தலர்கள் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து அவர்களுக்காக அக்கறை காட்டினார்கள்.

அவர்களுக்கு **கட்டளைகளைக்** கொடுத்த "அப்போஸ்தலர்கள்" யார்? அவர்கள் கர்த்தரால் முதல் கட்டமாக, தெரிந்து கொள்ளப்பட்டு அனுப்பப்பட்ட பன்னிரெண்டு பேர். அதற்குப் பதிலாக, அந்த பன்னிரெண்டு பேரும், மற்றவர்களுக்குப் போதித்து கட்டளை கொடுத்து போகச் சொன்னார்கள்.[2] முதல்கட்டமாக என்று பேதுரு குறிப்பிடுகிறவர்கள் அநேகமாக தனது வாசகர்களுக்கு சுவிசேஷத்தைப் போதித்தவர்கள் பன்னிரெண்டு பேருக்குள் இருந்தவர்களாக இருக்கலாம் அல்லது பன்னிரெண்டு பேரால் கட்டளை பெற்றவர்களாயிருக்கலாம். என்று பேதுரு அர்த்தப்படுத்தினார். இயேசுவைப்பற்றின செய்தியை முதலாவதாக போதித்த செய்தியாளர்கள் யார் என்பதைவிட, அந்த செய்தியானது அப்போஸ்தலரிடமிருந்து துவங்கினது என்பது தான் முக்கியமானதாக இருந்தது.

## "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" (3:3-7)

**3முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து,**
**4அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த**

**விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். [5]பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலை கொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், [6]அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். [7]இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.**

*கள்ளப் போதகர்களின் உபதேசங்களைக் குறித்து பேதுரு மிக விளக்கமாகப் போகாத நிலையில், கர்த்தர் மறுபடியும் வரப்போகிறார் என்பதைக் கள்ளப் போதகர்கள் மறுதலித்தனர் என்று சொல்லுவது பாதுகாப்பானது. ஆதிகால சுவிசேஷகர்கள் மனம் மாற்றப்படுவோரிடம் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும் கர்த்தர் மறுபடியும் வருகிறார் என்று உறுதியளித்தனர். மேலும், அவர் வருகை சமீபமாயிருக்கிறது என்றும் சொன்னார்கள் (யாக்கோபு 5:8; 1 பேதுரு 4:7). "சமீபம்" எனும் வார்த்தை இத்துடன் தொடர்புடைய வார்த்தை, எனவே கிறிஸ்து சில வருடங்களுக்குள்ளாகவோ, அதிகப்பட்சம் சில பத்தாண்டுகளிலோ அநேகர் கிறிஸ்துவை எதிர்பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. காலம் கடந்து விட்டது, இயேசுவோ வரவில்லை. அவரது வருகையின் எதிர்பார்ப்பு நடவாததால் கள்ளப் போதகர்கள் அதைப் பயன்படுத்தி அவர் வரப்போவதில்லை என்று உறுதிபடுத்தத் தொடங்கினர். மாறி மாறி, உண்மையில், கர்த்தர் வந்து விட்டார் என்று சிலர் தர்க்கிக்கத் தொடங்கினர். அதை ஆவிக்குரிய ரீதியில், நேரடியாக இல்லாமல் வந்துவிட்டார் என்று சொன்னார்கள். உதாரணமாக, அவர்களில் சிலர் ஞானஸ்நானம் பெற்ற போது தனிப்பட்ட ரீதியில் கர்த்தர் தங்களிடம் வந்து விட்டதாகக் கூறினர். பேதுரு இவைகளில் எதையுமே குறிப்பிடவில்லை. அப்போஸ்தலன் அதை மிகத் தெளிவாக கர்த்தரின் வருகை யாருக்கும் சந்தேகமில்லாத வகையிலிருக்கும் என்று சொன்னார். கடந்த காலங்களில் உலகை தேவன் நியாயந்தீர்த்ததுபோல, மறுபடியும் நியாயந்தீர்ப்பார்.*

***வசனம் 3.*** *கள்ளப் போதகர்கள் கிறிஸ்தவர்களுக்குள்ளே தோன்றியிருந்த படியால், ஒருவரும் கண்காணிப்பின்றி இருந்துவிடக் கூடாது. பவுல் மற்ற கிறிஸ்தவர்களுக்கு எச்சரித்தது போலவே, பேதுருவும் அவர்களை எச்சரித்து கள்ளப் போதகர்களும் அவர்களுக்குள் தோன்றுவார்கள் என்று சொன்னார். (காண்க நடபடிகள் 20:29-31; 1 தீமோத்தேயு 4). ஆங்கிலம் பேசுவோரின் காதில்* ***பரியாசக்காரர்*** *(வந்து)* ***பரியாசம் பண்ணுவார்கள்*** *என்பது சற்று அதிகமாகத் தோன்றுகிறது, ஆகிலும் எபிரெய மொழியில் நடைமுறையில் வெளிப்படுத்தும் விதம் இது. அப்போஸ்தலன் இலக்கண ரீதியாக தனது முதல் பாஷைக்குத் திரும்பி இதை எழுதியிருக்கிறார்.*

*இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் "பரியாசக்காரர்" என்பது அதிகாரம் 2ல் பேசப்படுகிற கள்ளப் போதகர்கள் தான். அவர்கள் அப்போஸ்தலர்களின் போதனைகளை கிண்டலடித்து, குறிப்பாக கர்த்தருடைய வருகையை பரியாசம் பண்ணியிருந்தார்கள்; அவர்கள் தங்கள்* ***சுய இச்சைகளின்படி நடந்திருந்தார்கள்.***

அவர்களுடைய ஜீவியம் முற்றிலும் தேவனுடைய ஜனங்களின் பரிசுத்த நடக்கைகளுக்கு விரோதமாயிருந்தது. மைல்கேல் கிரீன் என்பவர் தனது விளக்கத்தில், "வெறுப்பு மனப்பான்மையும் சுயவிருப்பங்களும் வழக்கமாக ஒன்றாகச் செல்கின்றன"[3] என்றார். அப்போஸ்தலர்கள் மூலம் தேவனுடைய வெளிப்பாட்டுக்குக் கொஞ்சமே மரியாதை வைத்திருந்தவர்கள் உபதேசக் கோட்பாடுகளிலும் ஒழுக்கரீதியான காரியங்களிலும் மீறுகின்ற விஷயத்தில் திறமை பெற்று விளங்கினர்.

பேதுருவும் அவருடைய வாசகர்களும் **கடைசி நாட்களில்** வாழ்கிறோம் என்பதைத் தவிரவேறெதையும் அவர் குறிப்பிடவில்லை. கர்த்தர் தமது வருகையைக் குறித்து ஆயிரம் வருஷம் தாமதித்தாலும் அது கடைசி நாட்களே (3:8). "கடைசி நாட்கள்" என்பது, 2 தீமோத்தேயு 3:1ன் படியும் எபிரெயர் 1:1, 2ன் படியும், இரட்சகருடைய முதல் வருகை தொடங்கி (அவருடைய ராஜ்யத்தின் வருகையின் துவக்கம் உணரப்படும் நாள் துவங்கி) அவருடைய இரண்டாம் வருகை வரை (நியாயத்தீர்ப்பை முடித்து அவருடைய ஆளுகையின் முடிவை உணரும் வரை) யிலான இடைப்பட்ட முழு நாட்களையும் குறிக்கும். பேதுருவும் பிற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் தீர்க்கதரிசிகளை மேற்கோள்காட்டி "கடைசி நாட்கள்" குறித்த அவர்களுடைய புரிந்து கொள்ளுதலைச் சுட்டிக் காட்டினார்கள். "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்," என்று ஏசாயா எழுதினார். (ஏசாயா 2:2). இந்த நாட்களைக் காண ஆசையாயிருந்த தீர்க்கதரிசிகளுடைய நாட்களிலே பேதுருவின் கிறிஸ்தவ வாசகர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர், அந்நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் ஸ்தாபிதம் பெற்றிருந்தது. தீர்க்கதரிசி ஏசாயாவின் சம காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த பரியாசக்காரர்கள் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளை பரியாசம் பண்ணினது போலவே அவருடைய வார்த்தைகளை பரியாசம் பண்ணியிருந்தார்கள் (28:14, 15). கிறிஸ்தவர்கள் தங்கள் "கடைசி நாட்களில்" வாழ்கிறார்கள் என்பது அவர்களுடைய ஊழியத்தின் அவசர செயல்பாட்டையும் அவர்களுடைய ஊழியத்தைக் குறித்து முன்னுரைப்பையும் சேர்க்கிறது.

**வசனம் 4.** கள்ளப்போதகர்கள் வெறுப்பு மனப்பான்மையோடே, **"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?"** என கோரிக்கை எழுப்பினதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்கள் விசுவாசிகளை பரிகாசம் பண்ணி, அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நேரடிப் பொருளில் எடுத்துக் கொண்டு வஞ்சிக்கப்படக் கூடியவர்களாய் இருந்ததாக குற்றஞ்சுமத்தினர். அவர்கள், **"பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே"** என்று தெளிவாய்ச் சொன்னார்கள். பருவக் காலங்களின் வருகையும் கடந்து போதலும், புதிய சந்ததியின் பிறப்பும் பழைய சந்ததியின் மரணமும், வாழ்க்கைச் சுழற்சியின் முடிவற்றத்தன்மையைக் காட்டுகிறது. இப்படியாக கள்ளப் போதகர்கள் தர்க்கித்தார்கள். "அவருடைய வருகையின் வாக்குத்தத்தம் என்று சொல்லி," இருதயம் சோர்வடையத்தக்கதாகச் சொல்லப்படுகிற கட்டுக்கதை என்றார்கள்.

வெறுப்பு மனப்பான்மை என்பது மனுஷன் தோன்றின காலத்திலிருந்து

இருப்பவை. அது தங்களுக்கென சட்டமோ கட்டுப்பாடோ இருக்கக் கூடாது என்று எண்ணுபவர்களுக்கு அது குறிப்பிடத்தக்க உபத்திரவம். இதினாலே சாலொமோன் இதிலே போராடியிருக்கிறார்: "முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை" (பிரசங்கி 1:9) என்றார். இங்கே குறிப்பிடப்படுவதைக் காட்டிலும் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளின் நிலை அதிகமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது ஒரு சில இடங்களே: விசுவாசிகளைப் பொறுத்தமட்டில், இந்த உலகம் எங்கோ போய்க் கொண்டுள்ளது, அது ஒரு முடிவைநோக்கி நகருகிறது என்று நம்புகிறார்கள். அவிசுவாசிகளோ சந்தர்ப்பமும் சூழ்நிலைகளுமே ஆளுகிறது, உலகம் எங்கும் போகவில்லை. மனித ஜீவியத்திற்கென முழுமையான நோக்கம் எதுவுமில்லை, என்கின்றனர்.

"மரணம்" என்பதற்கு பேதுரு பயன்படுத்தியுள்ள வார்த்தை *(koimaomai)*, கடந்து போகும் ஆர்வமுள்ளதாக இருக்கிறது. ஸ்தேவானுடைய மரணத்திற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. "அவன் நித்திரை செய்தான்," என்று லூக்கா எழுதினான் (நடபடிகள் 7:60). அதே வார்த்தையை பவுல் மரித்தோரைக் குறிக்கும் போது, "நித்திரை அடைந்தவர்கள்" என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 4:13). நேரடிப் பொருளில் NASB மொழிபெயர்ப்பில் கொடுக்கப்பட்டது, ஆனால் அநேக மொழிபெயர்ப்புகள் "மரித்தல்" என்ற வினைச் சொல்லையே கொடுத்துள்ளன. வார்த்தையின் பொருள் அவ்வளவு தெளிவாக உள்ளது. ஆனாலும், "நித்திரை" என்பது மரணத்தைக் குறித்துப் பேசுகிற மிருதுவான முறையாகும்.

"நித்திரை" என்பது ஒரு பொதுவான உருவகமாக கிரேக்க ரோம உலகில் மரணத்துக்குப் பயன்படுத்தப்பட்டது, அதே வேளையில் மரணமானது ஒரு அசிங்கமான உழைத்துக் களைத்துபோன, உலகியலுக்கு ஏற்றதாகப் பேசப்பட்டது. கைப்பிடியுள்ள குவளைகள் பழங்காலத்தில் மண்டையோடு வடிவத்தில் வடிவமைக்கப்பட்டு உள்ளவைகளைக் காணலாம். இந்தக் காலக் கட்டத்தில் ஒரு பொதுவான அடைமொழியாக ரோம நினைவுச் சின்னங்களாக பொறிக்கப்பட்டு இலத்தீன எழுத்துக்களில் "N F F N S N C," என்ற முதல் எழுத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளன, அவைகள் *Non fui, fui, non sum, non curo.* என்ற வார்த்தையமைப்பை கொடுக்கிறது. அதை மொழியாக்கம் செய்தால், "நான் இருக்க வில்லை; நான் இருந்தேன், நான் இல்லை, நான் கவலைப் படவில்லை"[4] எனப்படும். பேதுரு காலத்தில் வாழ்ந்தவர்களில் அநேகருக்கும், மரணம் என்பது ஒரு அசிங்கமான அதே வேளையில் கவலையைத் தருகிற ஒருகாரியமாக எண்ணப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கோ மரணம் என்பது நித்திரை செய்வது.

சிலர் பேதுருவின் வார்த்தைகளை கடந்து போன பத்தாண்டுக் கணக்காக பார்க்க விரும்புகிறார்கள். அப்போஸ்தலன் "பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு" என்று சொல்லுவதால் அது ஒரு பொழிப்புரை வார்த்தைகள் அல்ல என்று தர்க்கிக்கின்றனர். பிதாக்கள் என்பவர்கள் வயது முதிர்ந்து முதல் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருந்தவர்கள், என்று அவர்கள் சொல்லக்கூடும். வருடங்கள் கடந்து போயின, தலைமுறைகள் மறைந்தன, இன்னமும் கர்த்தர் வரவில்லை. கள்ளப் போதகர்கள், நீண்டநாட்களாக

ஜனங்கள் நம்பிக் கொண்டிருந்த நம்பிக்கை ஏமாற்றம் தந்ததை சாதகமாக்கிக் கொண்டனர். இப்படியாக வார்த்தைகளை வியாக்கியானமாக்கி, 2 பேதுரு புத்தகம் அப்போஸ்தலனாகிய பேதுரு மரித்து பல பத்துவருடங்கள் கழித்து தான் எழுதப்பட்டது என்ற கருத்தைப் பற்றி கொண்டுள்ளனர். இந்த மொழிபெயர்ப்பு வியாக்கியானம் பல காரணங்களினால் தவறுகின்றன.

அப்படிப்பட்ட வியாக்கியான மொழிபெயர்ப்பு பத்தாண்டுக் கணக்கான ஏமாற்றங்களுக்குப் பிறகே உறுதிப்பட்டிருக்க வேண்டும் என யூகிக்கின்றனர். அப்போஸ்தலிக செய்தி என்னவெனில் "எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று" (1 பேதுரு 4:7). பெரும்பாலான கிறிஸ்தவர்கள் "சமீபம்" என்ற வார்த்தையை எப்படி புரிந்து கொண்டனர் என்று கணிப்பது கடினமான ஒரு காரியமாகும். சிலர் கர்த்தர் ஒரு வருஷத்திலோ, அல்லது ஒருவேளை ஐந்து வருடங்களுக்குள்ளோ வரக்கூடும் என்று முடிவு எடுத்திருந்திருக்கலாம், ஏமாற்றம் உறுதிப்பட பத்து வருடக் கணக்குகள் தேவையில்லை. அதன் ஆரம்பக் கட்டகாலத்திலேயே ஏமாற்றம் என்பது மிகக் கூர்மையாக உணரப்பட்டிருக்கக் கூடும். கள்ளப்போதகர்கள் காலத்தின் ஆரம்பம் முதல் எதுவும் மாறவில்லை என்பதை சுட்டிக் காட்டி கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு தவறியதை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். தலைமுறைகள் தோன்றி மறைந்தன. அவர்களுடைய கூற்றுப்படி, "கர்த்தருடைய மறுவருகை" என்று ஒன்று இல்லை.

கள்ளப் போதகர்கள் தங்களைத் தாங்களே அறிவுக் காவலாளிகளாக நியமித்துக் கொண்டார்கள். இப்படித்தான் கர்த்தருடைய உண்மையான மருவருகை இல்லை என்று அறிந்திருந்தனர். கூடுதலாக, அவர்களுடைய அறிவோடு கூட, சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்து, தங்கள் கோரிக்கைகளை முன் வைத்தனர் (2:19), அதேபோல நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்தலையும் (2:21), மாம்ச இச்சைகளில் அடிபணிந்து தங்கள் விருப்பம் போல் வாழ்ந்தனர் (2:18). கர்த்தராகிய இயேசு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி (இரண்டாம் முறை) தோன்றுவார் என்பது பின்னதாக வந்த ஒரு கிறிஸ்தவக் கருத்தல்ல என்பதை கள்ளப் போதகர்கள் புரிந்து கொள்ள தவறிவிட்டனர். இயேசு மறுபடி வருவார் என்கிற உபதேசம் ஒரு தைரியமான அறிவிப்பாக, மனிதவர்க்கம் எங்கேயோ போய்க் கொண்டுள்ளது என்பதை காட்டுவதுமாகும். ஜனங்கள் நடந்து கொள்ளும் விதம் மற்றும் அவர்கள் என்னத்தை விசுவாசிக்கிறார்கள் என்பது முக்கியமானது, ஏனெனில் ஒரு முழுமையான கணக்கொப்புவிக்கும் நாளுக்காக உலகத்தை அசைத்துக் கொண்டுள்ளார். உலகத்தின் சகல நாடுகளும் அவர் முன்பாக அங்கே கூடும் (மத்தேயு 25:31-33), முழங்கால் யாவும் முடங்கும் (பிலிப்பியர் 2:10). கடைசி நாட்கள் என்பது ஒன்றாகச் சேர்ந்து கடைசி நாளாகி, "கர்த்தருடைய நாளாகும்" (3:10), அப்பொழுது காலம் நிறைவேறும். துவங்க ஒரு காலமுண்டு, முடிவு பெற ஒரு காலமுண்டு என்ற நம்பிக்கையைக் கொண்டு வளரும் கிறிஸ்தவ விசுவாசம் உறுதிப்படுகிறது என்று சொல்லுவதில் அர்த்தம் உண்டு. "சகலமும் இருந்த வண்ணமாகவே இருக்கிறது" என்று சொல்லுவது அவிசுவாசமாகும், ஒரு அவிசுவாசம் உலகப் பொருளியல் ரீதியில் நன்கு வேர் கொண்டு இன்றைய மேற்கத்திய கலாச்சாரத்தோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

***வசனம் 5.*** பேதுரு எல்லாவற்றிற்கும் ஒரு துவக்கம் உண்டு என்று தர்க்கம் பண்ணி அதற்கு ஒரு முடிவும் உண்டு என்று விவாதிக்கிறார். இரண்டிற்கும் தொடர்புண்டு. எல்லாவற்றையும் உண்டுபண்ணின தேவன், அவற்றிற்கு முடிவையும் கொண்டு வர வல்லவராயிருக்கிறார். இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்தபோதே கடைசி நாட்கள் தொடங்கிவிட்டன. ஒரு கடைசி நியாயத்தீர்ப்புக்காக உயிர்த்தெழுந்த இயேசு மீண்டும் வரப்போகிறார். தேவன் உண்மையில் இருப்பதால் ஆரம்பமும் துவக்கமும் உண்மையே. கர்த்தர் நியாயத்தீர்ப்பிலே வருவார். மறுபடியும் வருகிறார் என்பதற்கு மறுப்பு சொல்பவர்களைக் குறித்து, பேதுரு திருப்பிக் கொண்டு **பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்கள் தோன்றி நிலை கொண்டிருக்கின்றன என்பது அவர்களுடைய கவனிப்புக்கு தவறிப்போனது என்கிறார்.** கருத்து என்னவெனில் அவைகள் தேவனுடைய கட்டளையினால் உண்டானவை; அதேபோல தேவனுடைய கட்டளையினால் அவைகள் ஒரு முடிவுக்கு வரும்.

சிருஷ்டிப்பைக் குறித்து பேதுரு எழுதிய போது, அவர் பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசிகள் மற்றும் ஞானவான்களின் உயர் பண்புள்ள பாரம்பரியத்தில் நின்றார். தேவர்களுக்குள் யுத்தம் நடந்து அதன் விளைவாக மனுஷ வர்க்கம் பூமியின் மேல் இடம் பெற்றது என்ற கட்டுக்கதைகளை அவர் முன்நிலை காட்டவில்லை. இன்றைய விஞ்ஞானிகளை பிரியப்படுத்தத்தக்க வகையில் அவர் விளக்கம் கொடுக்க முற்படவில்லை. எளிமையான கருத்தை அவர் உறுதிப்படுத்தினார். அப்போஸ்தலன் சுய சாட்சியமாக, ஆதியாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளவைகளை உறுதிப்படுத்தினார். தேவன் பேசினார் மற்றும் உலகம் உண்டாயிற்று. அது ஒரு விசுவாசத்திலிருந்து தோன்றின அறிக்கையாயிருந்தது உண்மையில், உண்டாயிருப்பவைகளை உறுதிப்படுத்துவதில், “விஞ்ஞான ரீதியானாலும்” அல்லது வேறே லேபிள்கள் அவைகள் மீது ஒட்டப்பட்டாலும், அவை விசுவாசத்தின் அறிக்கையிலேயே தோன்றுகின்றன; ஆனால் எல்லா அறிக்கைகளும் விசுவாசத்தினாலோ அதன் அமைப்பிலோ தோன்றுவதில்லை.

மாறுபட்ட விசுவாச அறிக்கைகள், இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு ஆரம்பம் எதுவுமில்லை, பொருள்வாதமே நிலையானது, பொருள்வாதத்தில் இருக்கும் பருப்பொருள் தன்மை இயற்கையின் விருப்பம் போல் அமைப்பு பெற்று உற்பத்தி நடந்து வாழ்க்கையில் அதிசயங்களை நடப்பிக்கின்றன என்கின்றன. விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன், நம்புதற்குரிய அகந்தை மனித குடும்பங்களுக்குள் நுழைந்து விட்டது - ஒரு புறம் தேவனைக் கண்டுபிடிப்பது சந்தேகத்துக்குரியது எனும் அகந்தை, மறுபுறம் தாங்கமுடியாதது மற்றும் ஆச்சரியம் என்பது. கிறிஸ்தவ விசுவாச அறிக்கை உலகத்தை உற்றுக் கவனித்தலையும் மனித வாழ்வையும் கவனித்துப்பார்ப்பதின் அடிப்படையில் வருகிறது. தேவனுடைய வெளிப்பாடு இயற்கையிலும் வார்த்தையிலும் தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்று கணக்கில் எடுத்துக் கொள்கிறது. நல்ல காரணங்களுடன் தான் பேதுரு தனது வாசகர்களை நினைப்பூட்டி கர்த்தருடைய வருகையை மறுக்கும் கள்ளப் போதகர்கள் “தேவனுடைய வார்த்தையினால் தான்” வானமும் பூமியும் தோன்றின என்பதை மறந்து விட்டார்கள் என்கிறார்.

உலகத்தின் தோற்றத்தை சாட்சியமாக வைத்து அதுவே முடிவுக்கும் அடையாளம் என பேதுரு சொன்னதில் வியப்பொன்றுமில்லை, ஆனால் அவர் தெரிவு செய்த வார்த்தைகளைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. பேதுரு குறிப்பிட்டு **ஜலத்தினாலே தோன்றி ஜலத்தினாலே நிலை கொண்டிருக்கிற** பூமி என்று சொன்னார். ஜீவியத்தின் நிலைப்பாட்டுக்கு அவசியமான தண்ணீரைப் பற்றி எதுவும் அவர் குறிப்பிடவில்லை, ஆகிலும் அவருடைய வார்த்தைகளைப் பார்க்கும் போது சோதனையாக இருக்கிறது. மாறாக, பேதுரு நியாயத்தீர்ப்பு வரை தமது கருத்தை கொண்டு செல்கிறார். ஆதியாகம வரலாறு வானத்திலும் பூமியிலும் இருந்த தண்ணீரை வெவ்வேறாக பிரித்தார் என்று உருவகமாக பேசுகிறது. மேலும் பூமியிலிருக்கிற தண்ணீரெல்லாம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரைக் காணப்படவும் செய்தார் என்றும் விவரிக்கிறது (ஆதியாகமம் 1:6-10). தேவன் தண்ணீரை கையாளும் விதம், தண்ணீர் மீது அவருக்கு இருக்கும் கர்த்தத்துவம், சிருஷ்டிப்பின் கதையில் ஒரு கருவியாகும். தேவன் தண்ணீரை நிர்வாகம் செய்வது பற்றிய விளக்கத்தைக் கொடுத்தும், பேதுரு சிருஷ்டிப்பிலே காணப்பட்ட தண்ணீரைக் குறித்துப் பேசாமல் நியாயத்தீர்ப்பிலே பயன் தண்ணீரையே அக்கறையாக பேசுகிறார். அவருடைய சிந்தனையின் முன்னேற்றத்திற்குத் தக்க வகையில் அவருடைய கருத்து இன்னும் அதிகத் தெளிவாய்க் காணப்படுகிறது.

**வசனம் 6.** தனது இரண்டு குறுகிய நிருபங்களில், பேதுரு மூன்றுமுறை ஜலப்பிரளயத்தை மனதிற் கொண்டு வருகிறார் (1 பேதுரு 3:20; 2 பேதுரு 2:5; 3:6). எல்லா மூன்று நிகழ்வுகளிலும் ஜலப்பிரளயத்தைக் கொண்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பு அன்றைய உலகை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது என்பது ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது. அதேபோல அவருடைய நியாயத்தீர்ப்பு இப்போதைய உலகத்தை முடிவுக்குக் கொண்டு வரும் என்பதற்கான ஒரு நினைப்பூட்டுதலாகும். இந்த வசனத்தின் திறப்பு வார்த்தைகள், ஜலப்பிரளயத் தினாலே *(di' hōn)*, என்பவை கிரேக்க பிரதிப் பெயர்ச்சொல்லில் பன்மையில் குழப்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. பேதுரு "மூலமாக" அல்லது "அதைக் கொண்டு," என்று பொருள்படுத்துகிறார், தேவனுடைய வார்த்தையினாலும் தண்ணீரினாலும் அப்பொழுதிருந்த உலகம் அழிக்கப்பட்டது. ஜலப்பிரளயம் மட்டும் அப்பொழுது இருந்த உலகத்தை அழிக்கவில்லை, ஆனால் தேவனுடைய வசனமே அப்பொழுது அழிவுக்குக் காரணமாயிருந்தது. கர்த்தருடைய மறுவருகையை மறுதலித்தவர்களுக்கு அப்போஸ்தலன் தேவனே சிருஷ்டிகர் என்று நினைவுபடுத்தினார். கடந்த காலத்தில் சிருஷ்டிகர் உலகத்தை நியாயந்தீர்த்து தண்ணீரினால் அதை அழித்தார். அன்றைய உலகை கணக்கு ஒப்புவிக்கும்படி தேவன் அழைத்திருப்பாரானால், இப்போதைய உலகையும் கணக்குக் கொடுக்கும்படி மறுபடியும் அழைப்பார்.

**வசனம் 7.** தேவனுடைய வார்த்தை உலகத்தை உண்டாக்க கருவியாக இருந்தது போல அதன் அழிவுக்குத் தண்ணீர் கருவியாக இருந்தது போல, இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த வசனம் எதிர்ச்செயலாற்றுகிற இணைச்சொல்லைக் குறிப்பதாகும் அதாவது, முன்பு நடந்ததை முரணாக அடையாளப்படுத்தி குறிப்பிடுவது. NASB மொழிபெயர்ப்பில் சரியான

மொழிபெயர்ப்பாக ஆனால் என்று சொல்லப்படுகிறது. முரண்பாடு என்பது ஜலப்பிரளயத்தின் போது நடந்த நிகழ்ச்சியில் குறிப்பிடும் வானம் மற்றும் பூமிக்குமிடையே இப்பொழுதிருக்கிறவை நியாயத்தீர்ப்புக் குறித்தவைகளுடன் கூடிய முரண்பாடல்ல. ஜலப்பிரளயகால "வானங்களையும் பூமியையும்" தேவன் ஜலத்தினால் நியாயந்தீர்த்தார்; இப்போதைய வானங்களையும் பூமியையும் அக்கினியால் நியாயந்தீர்ப்பார். "வானங்கள் மற்றும் பூமி" எனும் சொற்றொடர் அளவுக்கதிகமாக பயன்படுத்தும் வார்த்தைகளைக் கொண்டு உலகில் மனித அனுபவங்களை பெறுவதை குறிப்பிடுவது. ஆகையால், ஜலப்பிரளயத்தால் எப்படி வானத்தை அழித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கப்பட்டதாக ஒப்பிடுவது என்ற கேள்வி பொருத்தமற்றது. கருத்து என்ன வென்றால் அனைத்து சிருஷ்டிகளுமே தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குரியவைகள் என்பதே.

ஜலப்பிரளயத்துக்குப் பின்பு, தேவன் நோவாவுக்கு மறு உறுதியளித்து, "நான் இப்பொழுது செய்தது போல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை" என்றார் (ஆதியாகமம் 8:21). யூத மொழிபெயர்ப்பாளர்கள் பொதுவாக "நான் இப்பொழுது செய்ததுபோல" என்ற சொற்றொடரை நன்கு அறிந்திருந்தனர், அது ஜெலத்தினால் உலகளாவிய ஒரு நியாயத்தீர்ப்பை மறுபடியும் கொடுப்பதில்லை என்று பொருள்படும்படி சொல்லப்பட்டது. உலகளாவிய ஒரு (அழிவை) நியாயத்தீர்ப்பை மறுபடி ஒருபோதும் இனி அனுப்புவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை. ஜலப்பிரளயத்துக்கு அநேக ஆண்டுகளுக்குப் பின்பு, உபாகமத்தின் முடிவுக்கு சற்று முன், மோசேயின் பாடலில் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தவனின் வாயில் தேவன் அருளிச் சொன்ன வார்த்தைகள்: "என் கோபத்தினால் அக்கினி பற்றிக்கொண்டது, அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்; அது பூமியையும் அதின் பலனையும் அழித்து, பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப் பண்ணும்" என்றார் (உபாகமம் 32:22).

புதிய ஏற்பாடு வரை அழைத்துச் சென்ற காலக்கட்டங்களில் தேவன் உலகளாவிய ஒரு நியாயத்தீர்ப்பாக அக்கினியை பூமியின் மேல் அனுப்புவார் என்பது யூதர்களுக்குப் பொதுவாகத் தெரிந்த விஷயமாக இருந்தது. பவுல் தனது வாசகர்களுக்கு மறு உறுதியளித்து, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு. கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" என்றார் (2 தெசலோனிக்கேயர் 1:7, 8). பேதுருவுக்கும், கூட தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நாள் என்பது கர்த்தராகிய இயேசு அக்கினி ஜூவாலையோடு வெளிப்படும் நாளாக இருக்கும்.

பேதுருவின் வாசகர்கள் அப்போஸ்தலனாகிய அவர் கொடுத்த தகுதியாம்சங்களை விட்டுவிடும் அளவுக்கு தவறியிருக்க மாட்டார்கள். எல்லா ஜனங்களும் அக்கினியைக் கொண்டு நியாயத்தீர்ப்பு அடைவதில்லை, துன்மார்க்கர் மட்டுமே அப்படித் தீர்க்கப்படுவார்கள். அக்கினியால் கொடுக்கப்படும் **நியாயத்தீர்ப்பு அவபக்தியுள்ள மனுஷர்களின் அழிவுக்காக மட்டுமே.** "அவபக்தியான மனுஷர்களில்," கள்ளப் போதகர்களும்

இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை, அவர்கள் தான் "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று கேட்டவர்கள், அதே நாள்தான் அவபக்தியுள்ளவர்கள் அழிக்கப்படும் நாள், அதே வேளையில் "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருந்தவர்களுக்கு" விடுதலையும் இரட்சிப்பும் அருளும் நாளாக இருக்கும் (3:12).

இன்றைய ஜனங்கள், கிறிஸ்தவர்களாயினும் கிறிஸ்தவர்களல்லாதவர்களாயினும், உலகின் முடிவுநாளாக இருக்கும். அழிவு நாளின் காட்சியை கற்பனை செய்திருக்கிறார்கள் ஒருவேளை பூமிக்குள்ளிருந்து எழும்பி வெடித்துச் சிதறும் எரிமலையால் அனைத்து ஜீவராசிகளும் அழிவுண்டு போகலாம், அல்லது யுத்தத்தை செய்யும் தேசங்கள் பயன்படுத்தும் அக்கினியை உட்படுத்திய நாசக் கருவிகளால் இந்த உலகக் காரியங்களுக்கு ஒரு முடிவைக் கொண்டு வரலாம். ஒரு வேளை இராட்சத விண்மீன் வகையில் எரிமீன்கல் வகையைச் சேர்ந்தவை பூமியை அசுர வேகத்தில் தாக்கி ஜீவராசிகளை அழிக்கலாம். நமது சகலவித விஞ்ஞான அதிசயங்களினால், இன்றைய ஜனங்களுக்கு எல்லாவற்றிற்கும் ஒரு முடிவை நினைத்துப்பார்க்க சிரமமாக இல்லை. அவிசுவாசிக் களுக்குக் கூட, இந்த உலகம் ஒரு பயமுறுத்தலாகவும் நிச்சயமற்ற இடமாகவும் காணுகிறது. திருமறை இந்த மட்டில் தெளிவாயிருக்கிறது: முடிவு வரும்போது அது திடீரென தோன்றியதாக இராது. தேவன் தமது சித்தத்தின்படியே இந்த உலகத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வருவார், அது அவருடைய குமாரனை இரண்டாம் முறை அனுப்பும் வேளையாக இருக்கும், நியாயத்தீர்ப்பும் நித்தியமும் தொடரும்.

## கர்த்தருடைய நாள் (3:8-10)

**8 பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். 9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப் போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.**

"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம்," "அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும்," "கர்த்தருடைய நாள்" ஆகிய அனைத்தும், பிற இதற்கொப்பான சொற்றொடர்களும் ஒரே நிகழ்வைத்தான் குறிப்பிடுகின்றன. பரியாசக்காரர்கள் மனிதர்களை கர்த்தர் நியாயத்தீர்ப்பிலே கொண்டு வருவாரா என்ற சந்தேகம் கொண்டவர்களாயிருந்திருக்கக் கூடும், ஆனால் பேதுரு தேவனே சிருஷ்டிகர் என்பதை நினைப்பூட்டுகிறார். அவர் சிருஷ்டித்தவைகளை அவரே நியாயந்தீர்ப்பார். கூடுதலாக, அப்போஸ்தலன் ஜலப்பிரளயத்துக்கு முந்தின காலத்திலும் பரியாசம் பண்ணினார்கள் என்பதை நினைப்பூட்டினார். சந்தேகப்பட்ட அந்த உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு வந்தது எவ்வளவு உறுதியோ

அவ்வளவு உறுதியாய், இந்த (இப்பொழுது) சந்தேகப்படுகிற உலகின் மீதும் நியாயத்தீர்ப்பு வரும். தாமதிக்கிற செயல் அதிகரிப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுபவர்களுக்கு, பேதுரு வேறு பரிசீலனைகளை வைக்கிறார். அவரது நோக்கம் அப்போஸ்தலர் கொடுத்த வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும் என்று தமது வாசகர்களுக்குத் தெரிவுப்படுத்துவது தான். தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும்படி பரமேறிச் சென்ற கர்த்தர் மீண்டும் வருகிறார். அவர் அப்படிவரும்போது மனிதவர்க்கத்துக்கு நியாயாதிபதியாகவும், நீதிமான்களுக்கு உண்மையை நிலைநாட்டுபவராகவும் காட்சியளிப்பார்.

**வசனம் 8.** தேவன் தாம் கொடுக்கும் நியாயத்தீர்ப்பில் தாமதித்ததால் தீர்க்கதரிசிகள் அவர்களுடைய சம காலத்தில் வாழ்ந்தவர்களிடமிருந்து பரியாசங்களை எதிர்கொண்டார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு தவறாமல் நிறைவேறும் என்று தனது தனிப்பட்ட முன்னேற்றத்திற்காக விஷத்தைக் கக்குகிறான் என்று எரேமியா குற்றஞ்சாட்டப்பட்டார். தீர்க்கதரிசிக்கே நன்றாகத் தெரிந்த விஷயம்தான் தனது செய்தி தேவனிடத்திலிருந்து வந்தவை என்று, இருந்தும் தேவனுடைய தாமதம் அவருக்கே குழப்பத்தைக் கொடுத்தது. தேவனிடத்தில் அவர் முறையிட்டு, "இதோ இவர்கள் என்னைப்பார்த்து: கர்த்தருடைய வார்த்தை எங்கே? அது இப்பொழுது வரட்டும் என்கிறார்கள். நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன், அதற்கு நான் மிஞ்சி நடக்கவில்லை; ஆபத்து நாளை விரும்புகிறதுமில்லையென்று நீர் அறிவீர்; என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாகச் செவ்வையாயிருந்தது" (எரேமியா 17:15, 16) என்று சொன்னார். பேதுருவைப் போலவே எரேமியாவும், கர்த்தர் எப்பொழுது நியாயந்தீர்ப்பாரென்று சரியாகச் சொல்ல இயலவில்லை, ஆனாலும், அவருடைய நியாயத்தீர்ப்பு உண்டு என்பதில் எவ்வித சந்தேசமும் கொண்டிருக்கவில்லை.

பேதுரு எரேமியாவைப்போல முறையீடு ஒன்றையும் முன்வைக்கவில்லை. மாறாக, அவர் தனது வாசகர்களுடன் வழக்காடினார். நியாயத்தீர்ப்பின் தாமதமும் யுகத்தின் முடிவில் ஏற்படும் விளைவும் என்றால் என்ன? அவருடைய எதிரிகள் குறிப்பிட்டது போல "கர்த்தருடைய நாள்" என்பதே இல்லை என்று பொருளா? பேதுரு அதைச் சுட்டிக்காட்டி "தாமதம்" என்பது தொடர்புடைய பதம் என்று சொன்னார். "தாமதம்" என்பதன் பொருள் என்னவெனில் தங்கள் இருதயத்துடிப்பிலே காலத்தை மதிப்பீடு செய்து பேசும் மனுஷர்கள் இருக்கும் போது தேவனுடைய பார்வையிலே அந்த "தாமத" அளவை தொடர்புபடுத்துவது அற்பமே. அப்போஸ்தலன் தமது எதிர்ப்பாளர்களை, **"இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்,"** என்ற வார்த்தைகளால் எதிர் கொண்டார். அப்போஸ்தலன், மோசேயினால் வெளிப்படையாக முகவரிபோல் எழுதப்பட்ட ஒரே சங்கீத வசனப்பகுதியை, மனதில் கொண்டு வருகிறார். "உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவுமிருக்கிறது" (சங்கீதம் 90:4). இந்த உள்சிந்தனையை எழுப்பிக் கட்டி, பேதுரு, **கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறது** என்றார்.

இஸ்ரவேலின் மகா தேவன் தலைமுறைகளை கடந்து செல்ல வைக்கிறார்.

அவர் ஆபிரகாமின் தேவனும் யாக்கோபு, மோசே, சாமுவேல், தாவீது, ஏசாயா, மற்றும் நசரேயனாகிய இயேசுவின் தேவனுமாயிருக்கிறார். “காலத்தை வருஷங்களால் அவர்கள் கணக்கிடுவதில்லை”[5] என்று பரலோகம் அப்படிப்பட்ட ஒரு இடம் என்பது போல் பாடுகிற ஒரு கிறிஸ்தவப் பாடல் உண்டு. அவருடைய வருகையை தேவன் நீண்ட காலம் தாமதப்படுத்திவிட்டார் என்பது போல் தோன்றும் என்று பேதுரு சொன்னார், ஆனாலும் மரிக்கும் மனுஷர்களைப் போல தேவன் காலத்தை மதிப்பிடுவதில்லை. அவருக்கு ஆயிரம் வருஷமோ, ஒரு பத்துலட்ச (மில்லியன்) வருஷங்களோ, ஒரு நாளைக்காட்டிலும் அல்லது ஒரு மணி நேரத்தைக் காட்டிலும் அதிகமல்ல, தேவனுடைய சிருஷ்டி அவரை வற்புறுத்தி நிலையற்ற காலத்தால் கட்டுண்டிருக்கிற மனித வர்க்கம் அவரை கட்டாயப்படுத்துவதற்கு தகுதியற்றது.

கர்த்தருக்கு ஆயிரம் வருஷம் என்பது ஒரு நாள் என்பதை அவருடைய வசதிக்கேற்ற குறிப்பாக மட்டுமே பேதுரு பேசுகிறார். அவர் மில்லியன் வருஷங்களையோ பத்துமில்லியன் வருஷங்களையோ கூட இது போல் குறிப்பிட்டு ஒரு நாள் போலவும் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் ஆதிக் கிறிஸ்தவ நூற்றாண்டுகளில் இந்த வசனம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு கூட எருசலேம் நகரத்தில் ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வார்கள் என்ற கருத்துக்கு கூடுதல் வலு சேர்க்கக்கூடியதாயிருக்கிறது, இரண்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில் வாழ்ந்த இரேனியஸ் போன்ற சிலர், இந்த வசனப்பகுதியில், சிருஷ்டிப்பின் ஏழு நாட்களில் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு ஆயிரம் வருடமாக கணக்கிட்டு, இந்த உலகம் ஏழாயிரம் வருடங்களுக்கு நிலைத்திருக்கும் என்று சொல்லுவதாகக் கண்டனர்.[6] கடைசி ஆயிரமாவது வருடத்தில் தான் கர்த்தர் பரிசுத்தவான்களோடு கூட பூமியிலே அரசாளும் காலமாயிருக்கும். கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வந்து ஆயிரம் வருஷம் அரசாளுவார் எனும் கோட்பாடு, சற்றுத்திருத்தங்களுடன், நூற்றாண்டுகளினூடே பரவி வந்து கொண்டுள்ளது. இதன் விளைவு, கி. மு. 4004ல், சிருஷ்டிப்பு இடம் பெற்றது என்று தேதியிட்ட பிஷப் அஸ்ஸரிடம் காணப்பட்டது, சமீபத்திய திருமறையில் இடது பக்கக் கோட்டிற்குள் அச்சிடப்பட்டிருந்தது அது இன்றைய ஆயிரவருட அரசாட்சி கொள்கைகளையும் மற்றும் யுகத்தைப் பற்றிய விளைவையும் ஏற்படுத்தியது. இந்தப் பின்னதான விசுவாசிகளைப் பற்றி பேதுரு யூகத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து பேசவில்லை. கர்த்தர், தமது நல்ல வேளையில் திரும்பவும் வருவார் என்று சொல்லுவதில் திருப்திப்பட்டுக் கொண்டார். அப்படி அவர் வரும்போது, நியாயத்தீர்ப்பும் நித்தியமும் தொடரும்.

**வசனம் 9.** கர்த்தருடைய மறுவருகை தாமதமாவதை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட கள்ளப் போதகர்கள் அவர் வரப்போவதில்லை என்பதற்கு அதையே சாட்சியமாக்கினர். அப்போஸ்தலன் அவருடைய வருகையின் தாமதத்திற்கான மற்றொரு பகுத்தறிவுக் காரணத்தை கொடுத்தார்: **அவர் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.** புதிய ஏற்பாட்டுக்கு முன்னும் பின்னுமாக காலங்களின் நிலைபாடான செயல்கள் யூதர்களின் மத்தியில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் தாமதமானது அடிக்கடி அக்கறைப்படக்

*கூடியதாய் இருந்தது. விசுவாசமுள்ளவர்கள் சந்தேகம் தீர்க்கப்பட்ட எதிர்நோக்கியிருந்தனர். கர்த்தர் தாமதாயிருக்கக் காரணம் என்ன? பேதுரு தைரியமாக இதற்குப் பதிலளித்து,* ***தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்ததைக் குறித்து தாமதமாயிராமல்*** *என்று சொன்னார். தேவன் தமது நோக்கத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). இந்தக் காரணத்தினால் நியாயத்தீர்ப்புக்கு அவர் தாமதித்துக் கொண்டிருக்கிறார். அறியாதவர்களும் கலகக்காரர்களும் அதுபோலவே இயேசுவின் சாட்சியத்துக்கு செவி கொடுக்கவும் அவர்கள் மனந்திரும்பவும், அவருக்குக் கீழ்ப்படியவும் கால அவகாசம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். "தேவனுடைய நீடிய பொறுமை ஒரு இடைவேளையை உண்டாக்குகிறது, இது ஒரு அவகாசமளிக்கும் காலம், மனந்திரும்ப அளித்திருக்கும் ஒரு கடைசி சந்தர்ப்பமாகும்."[7]*

*தமது மரணத்துக்கு முன்பாக, இயேசு தாமே தமது வருகையைக் குறித்துப் பேசினார், ஆகிலும் அவருடைய வருகையின் சரியான நாளும் வேளையும் யூகத்திற்கு அடுத்த காரியமல்ல என்று சொன்னார். இந்தக் கருத்தை அடிக்கோடிட ஏதுவாக, இயேசு "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்," என்று சொன்னார் (மத்தேயு 24:36). தமது சீஷர்களின் கற்றலில் முடிவு காலத்தின் காரியங்களை எதிர்பார்க்கும் முறைகளைச் சொல்லிக் கொடுப்பதில் கவனமாயிருந்தார். மத்தேயு 24ன் முடிவு வசனங்களிலிருந்தும் மத்தேயு 25 முழுவதும் தமது வருகையையும் அத்துடன் தொடரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து எண்ணிறைந்த உவமைகளை தொடர்புபடுத்தி பேசினார். அவருடைய வருகை திடீரென்று இருக்கும். ஜனங்கள் அவரவர்களுடைய அன்றாடக் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர்: பெண் கொடுத்தும் பெண் கொண்டும், வயலில் வேலை செய்வதும் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பதிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பர் (மத்தேயு 24:37-41).*

*இயேசுவின் இரண்டாம் வருகையும் நியாயத்தீர்ப்பும் சிலரை ஆச்சரியப்பட வைக்கத் தக்க வகையில் வரும், ஏனெனில் அவர்கள் அவரது வருகை தாமதமாகும் என்று எதிர் பார்க்கின்றனர். அவர்கள் தனது எஜமானனால் உக்கிராண ஊழியத்தைப் பெற்றிருக்கும் ஒரு உக்கிராணக்காரனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அந்த உக்கிராணக்காரன் தன் எஜமானனின் வருவதற்கு நாள் செல்லும் என்று எண்ணி மற்ற வேலைக்காரர்களை அடிக்கவும் வெறியரோடே குடிக்கவும் தலைப்பட்டு தன் எஜமானனின் ஆஸ்திகளுக்கு சேதம் ஏற்படுத்துகிறவனாயிருந்தான். அவன் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே, எஜமான் திடீரென வந்து விடுகிறார். அந்த ஊழியக்காரன் "மாயக்காரரோடே பங்கு நியமிக்கப்பட்டான்" (மத்தேயு 24:51).*

*மற்றவர்களின் எதிர்பார்ப்பு வித்தியாசமானதாக இருக்கும். அவரது தாமதம் பற்றி சிந்திக்காமல், அவருடைய மறுவருகையைக் குறித்து ஒரு காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய கணக்கீட்டின் படியானதாக அவருடைய சித்தமில்லாமற் போனால், அவர்களுடையே விசுவாசம் பெலவீனமடையும். அவர்கள் மறுபடியும் உலகத்திற்கே திரும்பி*

விடக் கூடும். தமது எச்சரிக்கை கொடுத்தலை தெளிவுபடுத்த, மணவாளன் வரக் காத்திருந்த பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையை இயேசு சொன்னார். அவர்கள் எதிர்பார்த்ததைவிட தாமதமாயிற்று, ஆதலால் அவர்களுடைய விசுவாசம் அதற்கு உரியதாக இருக்க வில்லை (மத்தேயு 25:1-13). சிலருக்கு அவர்கள் எதிர்பார்ப்பதற்கு முன்னாகவே கர்த்தர் வந்துவிடக் கூடும்; மற்றவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்ததை விட தாமதமாக வரக்கூடும். இயேசு தம்மைப் பின்பற்றுவோர் அவர் எப்பொழுது வந்தாலும் சந்திக்க ஆயத்தமாக இருக்கும்படி விரும்பினார். எவ்விதமான யூகமும் இடம் பெறாமல் விட்டுவிடும்படியாக அவர் ஊக்கமளிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் சீஷர்கள் கர்த்தர் எப்பொழுது மறுபடியும் வருவார் என்று சொல்லி எந்த யூகத்தையும் வெளியிட வில் லை. இந்த சம்பவம் சமீபமாயிருக்கிறது என்ற எதிர்பார்ப்போடு வாழ்க்கை வாழப்படுகிறது. அவருடைய வருகை முன்போ பின்போ எப்படியிருந்தாலும் ஒரு ஆயத்தப்பட்ட வாழ்க்கையை விசுவாசிகள் வாழ வேண்டியவர்கள். இருந்தாலும் யூகம் குறைவு படவில்லை. பூர்வாங்க மற்றும் இன்றைய கிறிஸ்தவ பிரிவினை வாதிகள் ஒரு போதும் சோர்வடையாமல் தானியேல், எசேக்கியேல், அல்லது வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட தரிசனங்களைச் சார்ந்து யூகமாக பேசுவதில் குறைவு படவில்லை. திறவுபட்ட முறைகள், காலக்கணக்கீடுகள் ஆகியவற்றால், குறிப்பிட்ட ஏதோ ஒரு நாளிலே கர்த்தர் மறுபடியும் வருவார் என்று உலகத்துக்கு அறிவித்தார்கள். வெண்ணாடை தரித்து, வானத்தை நோக்கித் தங்கள் கண்களைப் பதித்தவர்களாக, வீட்டுக் கூரைகளின் மேல் ஏறி உட்கார்ந்து எதிர்பார்த்தவர்களும் உண்டு. நாட்கள் வருகின்றன போகின்றன, கர்த்தரோ தமது சுய நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டு தான் இருக்கிறார்.

கர்த்தர் மறுபடியும் வருவார் என்று பேதுரு சொன்னார். கிறிஸ்தவர்கள் இந்த எதிர்பார்ப்போடே வாழ வேண்டியவர்கள். தேவன் ஒருவர் மட்டுமே மாறுபாடுகளை அறிகிறவர். அவர் தமது சிருஷ்டிகளின் பயன்பாட்டிற்காக நல்ல எண்ணத்தோடு வழிநடத்தப்படுகிறார். **ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார்,** இருந்தாலும், அவருடைய பரிசுத்தம் நிலைநாட்டப்படுவதில் மேலோட்டமாக விடப்படமாட்டாது. அவருடைய பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டாகும் போது, மனித வர்க்கங்களின் பாவங்கள் நிறைவுறும் போது, கர்த்தர் நியாயந்தீர்ப்பார், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" (2 கொரிந்தியர் 5:10).

**வசனம் 10.** ஆங்கிலத்தில் ஆனால் எனும் முரண்பட்ட அதே வேளையில் இரண்டு சொற்றொடர்களை இணைக்கும் சொல் ஒன்று வருகிறது. அது "அவர் வருவார்" என்ற கிரேக்க வினைச் சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு வலியுறுத்துகிறது (*hexei*), இப்பதம் மார்க்க விரோதிகளுக்கும் சந்தேகப்படுகிறவர்களுக்கும் எவ்வித பிழையுமில்லா வகையில் எச்சரிக்கையை முன் வைக்கிறது. பேதுருவின் செய்தி மிகவும் எளிமையானது. எந்த தவறும் நடக்காது, கர்த்தர் மறுபடியும் வருவார். அவர் ஆயிரம் வருடங்கள் தாமதித்தாலும், அல்லது இந்த நாள் முடிவதற்குள்ளாகவே வந்தாலும்,

நியாயத்தீர்ப்பு நிச்சயம். “கர்த்தருடைய நாள்” என்பது பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றிய ஒரு கருத்து. தீர்க்கதரிசிகளைப் பொறுத்த மட்டில், அது தேவன் வல்லமையாக செயல்படும் நாளாக இருந்தது, அது இஸ்ரவேலை விடுதலை பண்ணுவதாகவோ அல்லது தேசத்தை தண்டிக்கும் நாளாகவோ இருந்தது.

தேவனால் தெரிந்து கொண்ட ஜனங்களை உபத்திரவப்படுத்தினவர்களுக்கு அல்லது தங்கள் மேட்டிமையினால் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு, “கர்த்தருடைய நாள்” பயப்படத்தக்க ஒன்றாகவும், சூனியமானதாகவும், இருள் சூழ்ந்த நாளாகவும் இருக்கும். தேவனுடைய பற்றியெரியும் கோபம் கட்டவிழ்த்து விடப்படும். *“அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது, அது சர்வ வல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வருகிறது” (ஏசாயா 13:6; காண்க செப்பனியா 1:14-16).* பிரசித்தமாய்க்காணும் கருத்துக்கு ஆமோஸ் முரண்பட்ட கருத்தாக, “கர்த்தருடைய நாள்” என்பது தேவனுடைய கோபம் இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு எதிராக இருக்கும் என்றார். அது விடுதலையின் நாளாக இருக்கும். அந்த கருத்தினூடே தீர்க்கதரிசி சொன்னதாவது, “தேவன் உங்களுடனே கோபமாயிருக்கிறார். உங்களைப் சுற்றியுள்ள விக்கிரகாராதனை தேசங்களுடன் அல்ல.” *“கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும்” (ஆமோஸ் 5:18).*

புதிய ஏற்பாட்டில், “கர்த்தருடைய நாளோடு” அதிக நேர்மறைக்கருத்துக்கள் ஒத்துப் போய் பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் அதிகமாக பேசுகிறது. உறுதிப்படுத்திக் கொள்ள, அது இன்னும் அதிகக் கோபாக்கினையின் நாளாக நியாயத்தீர்ப்பு நாளாக இருக்கும்; ஆகிலும் அது தேவனுடைய ஜனங்கள் நிரூபித்துக் காட்டப்படும் நாளாகவும் இருக்கும், அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தில் சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் காண்பார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, “கர்த்தருடைய நாள்” என்பது இயேசு கிறிஸ்து நியாதிபதியாக வானத்திலே தோன்றுகிறதும், அவருடைய இரண்டாம் வருகையின் தீர்வை நாளாக இருக்கும்.

எருசலேமின் மேலும் உலகத்தின் மேலும் வருகிற இறுதி நியாயத்தீர்ப்பு ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைவாக லூக்கா 17:22-37ல் பேசப்படுகிறது, ஆகையால் அது குழப்பத்தைக் கொடுக்கிறது, ஆனாலும் “நாள்” எனும் கருத்து வசனப்பகுதி முழுவதிலும் செல்லுகிறது: *“... போல மனுஷ குமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்” (17:24). “போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்” (17:26). “அந்த நாளிலே” (17:31). “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடே ... இறங்கி வருவார்” (1 தெசலோனிக்கேயர் 4:16)* என்று பவுல் எழுதினார். பேதுருவைப் பொறுத்தமட்டில் “கர்த்தருடைய நாள்” என்பது பூமிக்குரிய காலத்தை முடிவுறச் செய்யும் ஒரு நிகழ்ச்சி. அந்த நாளிலே, இயேசு கோத்திரங்கள் யாவையும் நியாயத்தீர்ப்பு செய்வார். பூமி, குறைந்தபட்சம் இப்பொழுது அது இருக்கும் நிலையில், இல்லாமல் போகும். **வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம்.**

கர்த்தராகவும் நியாயதிபதியாகவும் இயேசு திடீரெனத் தோன்றுவார், ஒரு குறிப்பிட்ட நாளையும் நாழிகையையும் சுட்டிக்காட்டி முன்னதான

எச்சரிக்கை எதுவுமிராது. இயேசு தாம் மறுபடியும் திருடனைப்போல வரப்போவதாக தமது சீஷர்களிடம் சொன்னார் (மத்தேயு 24:43). பவுலும் 1 தெசலோனிக்கேயர் 5:2ல் திருடனுக்கு ஒப்பாக உருவகப்படுத்தினார். திருடனுடன் ஒப்பிடும் உருவகம் வெளிப்படுத்தின விசேஷத்திலும் தொடருகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 3:3; 16:15). பேதுருவின் போதனையின்படியும், கூட கர்த்தர் **திருடன் வருகிற விதமாய்** வருவார் என்றார். ஒரு திருடன் தான் இந்த நேரத்தில் உள்ளே புகுந்து கொள்ளையிடுவான் என்று முன் அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் வருவது போல, இயேசுவும் எந்த முன் அறிவிப்புத் திட்டத்தையும் கொடுப்பதில்லை. திருடனிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே பாதுகாப்பு எப்பொழுதும் எச்சரிக்கையாக இருப்பதுதான். கர்த்தர் எப்பொழுது வருவது என தெரிவு செய்தாலும் தேவனுடைய ஜனங்கள் அவளுக்காக ஆயத்தமாயிருந்து அதற்கேற்றாற் போல் வாழ வேண்டும். புதிய ஏற்பாடு முழுவதிலும், கர்த்தர் எப்பொழுது வருவார் என்பதற்கான மேற்கொண்டு எந்த வித யூகத்திற்கும் இடமளிக்கவில்லை அல்லது அவருடைய வருகையின் இயல்பும் சரியாகக் குறிப்பிடப்படவில்லை. மரணம் மற்றும் இறுதித்தீர்ப்பு பற்றியக் கோட்பாடு புதிய ஏற்பாட்டில் ஒழுக்கக்காரியங்களுக்காக சேவை செய்கிறது. அவர் வருவார் என்று அறிந்து, ஒருவர் தேவபக்தியுள்ள வராய் வாழ ஏதுவான எச்சரிப்பையும் ஏவுதலையும் கொடுக்கிறது.

வசனம் 10ன் கடைசிப்பகுதி புதிய ஏற்பாட்டிலேயே மிகப் பெரிய வேறுபாடுகளைக் கொடுக்கிற கடினமான வேத வசனப்பகுதியாகும். பழங்கால பிரதிகளில், பூமியும் அதின் கிரியைகள் யாவையும் எரிந்து அழிந்து போகும் என்று சொல்லப்படுகிறது (*katakaēsetai*). வேறு பிரதிகளில், நேரடியாக மொழிபெயர்த்தால், "பூமியும் அதின் கிரியைகள் யாவும் கண்டுபிடிக்கப்படும்" (*heurethēsetai*). என்று சொல்லப்படுகிறது. வசனப்பகுதி சாட்சியம் சரிசமமாக பிரிக்கப்படுகிறது. NASB மொழிபெயர்ப்பிலும் KJV யிலும் "எரிந்து அழிந்து போகும்" என்று சொல்லப்படுகிறது, The New World மொழிபெயர்ப்பில் "கண்டு பிடிக்கப்படும்" (அதாவது "தோன்றும்") என்று இரட்சிக்கப்பட்டோரில் பெரும் பாலானவர்கள், எதிர்காலத்தில் ஏதோ ஒருவேளையில், புதுப்பிக்கப்பட்ட பூமியில் வாழ்வார்கள் என்ற போதனைக்குத் துணை போகும் வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

நாம் "எரிந்து அழிந்து போகும்" என்று வாசித்தாலும், "கண்டு பிடிக்கப்படும்" என்று வாசித்தாலும், வாசகர் வசனப்பகுதிக்குத் திரும்பி உதவிபெற ஏதுவாக குறிப்பிட்ட ஒரு சிறிய வேறுபாட்டை பேதுரு பயன்படுத்தின விதத்திலேயே புரிந்து கொள்ள வேண்டும். வசனப்பகுதியில், வானங்கள் அகன்றுபோம், பூமியிலுள்ள யாவும் வெந்து உருகிப்போகும் என்று சொல்லுகிறது. "கண்டு பிடிக்கப்படும்" என்று வாசித்தால், அந்த வார்த்தை சொல்லும் அர்த்தத்தை அந்த வசனப்பகுதியினால் மட்டுமே தீர்மானிக்க முடியும். அதேபோல NIV -யில் வசனப்பகுதியின் வாசகத்தை எடுத்துக்கொண்டு மொழிபெயர்ப்பில், "பூமியும் அதிலுள்ள யாவும் வெறுமையாக்கப்படும்" என்று சொல்லப்படுகிறது. "கண்டுபிடிக்கப்பட்டது" என்பது சரியான வாசகமாயின், பேதுரு "கண்டுபிடிக்கப்பட்டாயிற்று" என்றோ "வெறுமையாக்கப்பட்டது" என்றோ, "திறக்கப்பட்டது" என்றோ பொருள்படும் விதத்தில் பேதுரு

*எழுதியிருக்க வேண்டும். அப்போஸ்தலனின் அர்த்தம் தெளிவாக காணுகிறது. பூமியும் அதிலுள்ள யாவும் கர்த்தரின் வருகையின் போது அழிந்து போகும்.*

## *கர்த்தருடைய நாளின் கண்ணோட்டத்தில் பரிசுத்த வாழ்க்கை (3:11-13)*

**[11]இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்? [12]தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் வெந்து உருகிப்போம். [13]அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும். புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.**

*கர்த்தருடைய மறுவருகையை பேதுரு வெறும் ஆர்வத்தைத் திருப்திபடுத்தும் விதமாக விளக்கமளிக்க வில்லை. எப்பொழுது கர்த்தர் வருவார் என்று யூகமாகச் சொல்லுவதில் அர்த்தம் எதுவுமில்லை. காலத்தாலும் சூழ்நிலைகளாலும் கட்டப்பட்டிருக்கிறபடியால், தேவன் புரிந்து கொண்டிருப்பதையெல்லாம் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய வருகையையும் அத்துடன் வருகிற நியாயத்தீர்ப்பையும் பற்றிப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அவருடைய ஜனங்கள் அறிந்து கொள்வது போதுமானது, எப்படி செயல்படுவார், எப்பொழுது செயல்பாடுவார் என்றெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுவதில்லை. தேவன் எப்படி இந்த உலகிற்கு முடிவைக் கொண்டு வருவார் என்று யூகித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, பேதுரு சம்பந்தப்படுத்துதலிலேயே கவனம் செலுத்துவதில் திருப்திபட்டார். இந்த உலகம் தேவனுடைய பலத்த கரங்களால் நியாயந்தீர்க்கப்படுமானால், இயேசு மறுபடியும் வருவாரானால், மனித வர்க்கத்தை நியாயந்தீர்ப்பாரானால், மற்றும் பூமியை அழிப்பாரானால், பிறகு வரப்போகிற இந்த சம்பங்களை பரிசிலித்து கிறிஸ்தவர்கள் வாழவேண்டும். கர்த்தருடைய வருகையை கண்ணோக்கமாய் வைத்து வாழுகிற வாழ்க்கை வித்தியாசமானது. விசுவாசிகள் அவருடைய வருகையை ஆவலோடே எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் போது, அவர்கள் பரிசுத்தமுள்ள நல்லதொரு வாழ்க்கையை வாழுவார்கள். பின்வரும் வசனங்களில் பேதுருவின் கருத்துக்கள் இவைகளே.*

***வசனம் 11.*** *அப்போஸ்தலனின் கலை நயமான கேள்வி,* ***இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறவைகளாயிருக்கிறபடியால்,*** *இதன் முடிவுக் கருத்தாக* ***நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.*** *இதிலுள்ள அறைகூவல் எல்லாஜனத்தாருக்கும் சரியான பொருத்தமிக்கது, அது கிறிஸ்தவர்களானாலும் கிறிஸ்தவர்களல்லாதவர்களானாலும் பொருந்துகிற சவால் இது. பூமியின் ஜொலிஜொலிப்பெல்லாம் தற்காலிகமானவை என்று உணர்ந்து கொள்ள மிகப் பெரிய அறிவுத் திறன் தேவையில்லை. ஒருவர் குவிக்கும் ஆஸ்திகளெல்லாம் பின்விட்டுச் செல்லப்படும். ஒருவர் எதைக் கட்டி எழுப்புகிறாரோ அது அழிவுற்று தோல்வி அடையும். நாம் தேவனிடத்தில்*

விசுவாசமில்லாதவர்களாயிருந்தாலும் கூட, ஒருவருடைய வாழ்க்கைக்கு முடிவே இல்லை என்கிற ரீதியில் மதியீனமான கட்டளையிடலாகாது. அவிசுவாசிகளுக்கு, ஒரு வருந்தும் செயல் மட்டுமே தோன்றும், மனித வர்க்கத்தின் நம்பிக்கையற்ற விசுவாசம் புராணக் கதைகளில் வரும் தீயில் வாழும் பல்லியைக் காட்டிலும் ஒரு மூட்டைப் பூச்சியைக் காட்டிலும் மிகையானது அல்ல. காம இச்சை சம்பந்தப்பட்ட சந்தோஷங்களை தனது வாழ்க்கையில் எப்படி அநுபவித்தாலும் அவன் ஒரு நாள் மரிக்கவே செய்வான். அதற்கு மாறாக, முரண்பாடற்ற திருமறைச் செய்தி யாதெனில் ஜனங்கள் எல்லாரும் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டவர்கள், ஆதலால் அவர்கள் தேவனுக்குக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இந்த உலகம் தேவனுடைய சிருஷ்டிப்பாயிருந்தால், தேவன் அதின் விதியை நிர்ணயிக்க இயலும் மற்றும் சிலர் நிர்ணயிப்பார்.

தேவன் கொடுத்துள்ள காலத்தின் முடிவு பற்றிய வெளிப்பாடு வெறும் ஆர்வத்தின் திருப்திக்காக மட்டுமல்ல; அது தேவ பக்தியான வாழ்வை வாழ்வதற்கும்தான். தேவன் இருக்கிறார் என்ற உண்மையும், திருமறையில் அவர் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் என்ற உண்மையும், மனித நடத்தைகள் தேவனுடைய தன்மையின் பிரதிபலிப்பில் தொடரப்பட வேண்டும் என்பதற்காகவே. இதன் மையக் கருத்தாக, நமது கவனத்தைத் திருப்ப இரண்டு ஒழுக்க முறைகளை மட்டுமே கொண்டு நமது கோரிக்கையை வைக்கக் கூடும். முதலாவது மனித வர்க்கமெல்லாம் திடீரென தோன்றியவை, அவை தோன்றிய விதத்திலேயே மனம் என்று ஒன்று இல்லாமல், நோக்கம் எதுவுமில்லாமல், வழிகாட்டல் இல்லாமல், அப்படியே நிலைத்திருக்கும் தன்மையுடையது. இந்த வகையில், ஒழுக்கம் என்பதெல்லாம் விலங்குகளின் (நச்சு) கோரைப் பல் மற்றும் பீறும் நகங்களுமே. அதிக பருமனான தடியைக் கொண்டவனே சரியானவன்.

அறிவுடைமைக்கு அந்த மற்றொரு ஒழுக்க விதிமுறை தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவது. அது தேவன் ஒருவர் இருப்பதால்தான் தேவையான "நீதி" காணப்பட்டு உலக அமைப்பின் கட்டுமானத்தில் காணுகிறது. அதிலே வாழ்க்கையை நடத்துகிற குறிக்கோள்களினால் தங்களைச் சரியான இடத்தில் வைத்துக் கொள்கின்றனர். ஒழுக்கம் என்பது "அவருடைய கிருபைக்கும் நன்மைக்கும் தேவனுடைய ஜனங்கள் பதில் செய்வது" என்பதாகும்.[8] இதை குறித்து ராபர் டேவிட்ஸன் நன்றாகவே கூறினதாவது:

> கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான காரியம் என்னவெனில், ஒரு குறிப்பிட்ட கீழ்ப்படிதல், ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைப்பாதை ஜனங்களிடத்திலிருந்து கோரப்படுகிறது, ஏனெனில் அது தேவனைக் குறித்து அறியப்பட்டவையாக இருக்கிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஒழுக்க விதிமுறைகள் மிக நெருக்கமான உறவு முறையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய குணாதிசயங்களாகும்.[9]

கிறிஸ்தவ வாழ்க்கையின் மாற்றமில்லாக் குறிக்கோள் பரிசுத்த நடக்கையும் தேவபக்தியுமே. "நடக்கை" என்னும் வார்த்தை *(anastrophe)* சுய மனசாட்சியோடே வழி நடத்தப்படுகிற வாழ்க்கைப் பாதையை

குறிப்பிடுகிறது. பேதுருவைப் பொறுத்த மட்டில், வாழ்க்கைக்கு வழிகாட்டும் தகுதியான ஒரே கோட்பாடு தேவனால் வகுக்கப்பட்டது தான். "பரிசுத்த நடக்கை" என்பது தேவனுக்கு மகிமை சேர்க்கும் குணாதிசயம், ஏனெனில் அது தேவன் உண்டு என்பதையும் அவருடைய தன்மையையும் பிரதிபலிக்கிற ஒரு குணாதிசயமாகும். பேதுரு குறிப்பிட்ட "தேவபக்தி" எனும் வார்த்தை *(eusebeia)* பயப்படுதலுக்கும், அமைதிக்கும், விசுவாச வாழ்க்கையோடு செல்லுகிற ஆச்சரியமிகுந்த அதிசயமாகும். இந்த வசனப்பகுதியில், அது வாழ்க்கை அமைப்புக்கு குறிப்பாக தேவ நிச்சயத்தால் அவருடைய சர்வவல்லமை மிகுந்த சட்டங்களை இந்த உலகின் மேல் கொடுத்தவை.

**வசனம் 12. தேவனுடைய நாள்** எப்பொழுது வரும் என்ற காலக் கணக்கீட்டின்படி முன் கூட்டி அறியப்பட்ட நேரம் இயேசுவின் சீஷர்களுக்கு கொஞ்சமாவது அறிய வேண்டுமென்ற ஆவல் இருக்குமேயானால் அவருடைய வருகையைக் குறித்த அலட்சியமும் இராது. பயம்மிகுந்த காலமாக இருப்பதற்குப் பதிலாக, எதிர்பார்த்தலின் வேளையாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அவருடைய **வருகையைக் காண மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.** கிறிஸ்தவர்கள் தங்கள் மனதில் அந்த நாளை புதுப்பொழிவுடன் வைத்துக் கொண்டிருக்கும்படி விரும்பினார். அதை அவர்கள் பிரதிபலிக்கவும், அதன் பொருளைப் புரிந்து கொள்ளவும், அதற்கேற்ப தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் வேண்டியவர்கள். சங்கீதங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும், ஞானவான்கள் கர்த்தருக்குக் காத்திருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. அவருடைய சித்தப்படியான நேரத்தில் அவருடைய வழியில் அவர் செயல்படுவார் என்று அவர்களுக்குத் தெரியும். உலகத்தின் அநீதியும் தீமையும் ஒரு முடிவுக்கு வரும் என்று அறிந்து, அவர்கள் திருப்திப் பட்டுக் கொள்வார்கள். "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரனைப் பார்க்கிலும் அதிமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" (சங்கீதம் 130:5, 6).

இதற்கு முன்பு, பேதுரு குறிப்பிடுகையில் தேவன் நியாயத்தீர்ப்பு நாளுக்கு தாமதிக்கிறார், ஏனெனில் அவர் பொறுமையோடே, ஒருவர் கெட்டுப் போகாமல் மனந்திரும்ப வேண்டுமென்றுக் காத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார் (3:9). மனந்திரும்புதல் மற்றும் தேவபக்தியுள்ள வாழ்க்கை மூலமாக, கிறிஸ்தவர்கள் தங்களையும் உலகத்தையும் "தேவனுடைய நாளுக்கென்று" ஆயத்தப்படுத்தக் கூடும். மனிதனுடைய நடக்கைகளுக்கு தேவன் பதில் செய்வது போல் தோன்றுகிறது. தேவனுடைய இறுதித்தீர்ப்புக் கோட்பாடு ஒரு குறிப்பிட்ட அளவில் மனுஷனுடைய சுதந்திரத்தில் பொறுப்பேற்பதாகும். கர்த்தர் மீண்டும் வரும்போது, அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் போது, உலகத்தின் ஆவிக்குரிய நிலைமையை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படும். மனந்திரும்பப் போதியளவு அவகாசம் கொடுத்தபின் கர்த்தர் வருவார் என்று பேதுரு சொன்னார், அவ்வேளையில் கிறிஸ்தவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பார்கள். இப்படியாகத்தான் தேவனுடைய மகிமைக்கென்று விசுவாசிகள் தங்களை அர்ப்பணித்து "தேவனுடைய நாள் வருமென்று காத்துக் கொண்டிருக்க"

வேண்டும்.

"கர்த்தருடைய நாள்" என்பதற்குப் பதிலாக "தேவனுடைய நாள்" என்று பேதுரு குறிப்பிட்டிருப்பது எதிர்பாராதது, ஆனாலும் அவர் வேறு எந்த நாளையும் குறிப்பிட்டிருக்கக் கூடும் என்று ஆலோசனையாகச் சொல்ல எதுவுமில்லை. இந்த வார்த்தை எதிர்பாராதது. இந்தக் காரணத்தால் நமது கவனம் மிக அதிகமாகக் கோரப்படுகிறது. "வருகை" எனும் வார்த்தை *(parousia)* பொதுவாக இயேசுவை எழுவாயாக தொடர்புபடுத்தி பேசப்படுவது, மேலும் "தேவனுடைய நாள் வரும்படி" என்பதும் 3:4ல் "அவர் வருவார் என்கிற வாக்குத்தத்தம்" என்பதும் அதே நிகழ்வை குறிப்பிடுவது தான்.

எழுத்து வடிவத்தில், பூமிக்கு முடிவு உண்டாகக்கூடிய அநேக வழிகள் இருக்கின்றன. ஒரு பெரிய விண்மீன்கல் பூமியை நொறுக்கி சகல உயிர் வாழ்ஜீவன்களையும் அழித்து விடக்கூடும். ஏற்கனவே போதிய இரசாய யுத்தக் கருவிகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன, அவை மனிதனுடைய சுய தயாரிப்புகள், அவைகளைக் கொண்டு பூமியை பட்சித்து முழுமையாக தீக்கரையாக்க முடியும். வியாதிகள், சீதோஷ்ணநிலை மாற்றங்கள், அல்லது வேறே திரளான "இயற்கை" நிகழ்வுகள் மனுஷருடைய நாட்களுக்கு முடிவைக் கொண்டு வரக்கூடும். உலகத்தின் முடிவு என்பது மனதார அறியக்கூடாத விதியின் நிகழ்ச்சியல்ல என்று பேதுரு தெளிவாக்கினார். முடிவு வரும்போது அது நியாயத்தீர்ப்பின் தனிப்பட்ட செயலாக இருக்கும். மனிதனுடைய காலத்துக்கு முடிவு வரும்போது அது தேவனே முடிவைக் கொண்டு வந்து விட்டார் என்று பொருளாகும்.

"தேவனுடைய நாள்" வரவிருப்பதால், அந்த நாளில் **வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் வெந்து உருகிப் போம்,** "வானங்களும் பூமியும்" என்று 3:7ல் சொல்லப்பட்டவைகள் இந்த வசனத்தில் "வானங்களும்" "பூதங்களும்" என்று சமப்படுத்திக் காட்டுகிறது. பேதுரு இங்கே சம்பந்தப்படுத்தியிருக்கும் வார்த்தைகளின் பொருள் ஒருவர் பாவத்துடன் அற்பமாக விளையாடிக் கொண்டிருக்கலாகாது. ஒருவர் எப்படி வாழ்கிறார் என்பது மிக வினயமான விஷயமாகும். தேவன் ஒரு அன்பின் தகப்பன்; அதே வேளையில் அவர் பட்சிக்கும் அக்கினியாகவும் இருக்கிறார் (உபாகமம் 4:24; எபிரெயர் 12:29). அவர் அநியாயத்தையோ, வன்முறையையோ, கொடுங்கோன்மையையே, அல்லது வேறு எந்த வித உலகத்தின் தீமைகளையோ (காணக் கூடாததை, கண்டு சம்மதிக்கும் வகையில்) கண் சிமிட்டாதவர்.

**வசனம் 13.** ஏசாயா மூலமாக தேவன் "இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை" என்று வாக்குத்தத்தம் செய்தார் (ஏசாயா 65:17). இங்கே தீர்க்கதரிசி இஸ்ரவேலைத்திரும்பக் கட்டுவதைக் குறித்துப் பேசுகிறார். ஏசாயாவின் இந்த வார்த்தைகளை பேதுரு இரவல் வாங்கி கையாண்டிருக்கலாம், இரட்சிக்கப் பட்டவர்களை நித்திய ஜீவனில் பிரவேசிக்கச் செய்யும் காரியங்களைப் பேசும்படிக்கு இவைகளைப் பயன்படுத்துகிறார். அப்போஸ்தலன் இதனைக் குறிப்பிடுகையில் **அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே புதிய வானங்களும் புதிய பூமியும்** இருக்கும் என்று கூறமுடிந்தது. ஒருவேளை பேதுரு ஏசாயாவில்

குறிப்பிடப்பட்ட வாக்குத்தத்தத்தை சுட்டிக் காட்டியிருக்கலாம். மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் இயேசு அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த வேறுவகையில் அறியப்படாத வாக்குத்தத்தங்களைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கலாம். ஒன்றுக்கொன்று மாறிவருகிற முறையில், பரிசுத்த ஆவியானவர் புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி ஆகியவற்றைக் குறித்து வாக்குத்தத்தத்தை பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்தியிருக்கக் கூடும்.

புதிய வானங்களும் புதிய பூமியும் ஒரு முடிவற்ற யூகத்திற்குரிய பாடமாயிருக்கிறது. அதற்கு முந்தைய வசனப்பகுதியில் ஏசாயா ஓநாய், ஆட்டுக்குட்டி, சிங்கம், மற்றும் கன்றுக் குட்டி ஆகியன ஒன்றாகத் தங்கியிருக்கும் காட்சியை முன் வைக்கிறார் (ஏசாயா 11:6). இதை நாம் புதிய வானங்கள் புதிய பூமிக்கான நேரடி விளக்கமாக புரிந்து கொள்ளவேண்டுமா? பத்முத் தீவில் சிறைவைக்கப்பட்டிருக்கையில் யோவான், "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின" என்று எழுதினார் (வெளிப்படுத்தின விஷேசம் 21:1).

அப்போஸ்தலர்கள் எவைகளைக் குறித்தெல்லாம் பேசிக் கொண்டிருந்தனர்? இப்போது ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த கோளாக அந்த புதிய பூமி இருக்குமா? பூமியாகிய இந்தக் கோளமே புதிப்பிக்கப்பட்டு ஒரு நித்திய வாழ்விடமாக தேவனுடைய ஜனங்களுக்குக் கொடுக்கப்படுமா? அநேகமாக இல்லை. எப்படியிருப்பினும், வெளிப்படுத்தின விசேஷத்தில் புதிய எருசலேம், "தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வருவது" கவனிக்கத் தக்கது (வெளிப்படுத்தின விசேஷம் 21:2). புதிய எருசலேம் மீட்கப்பட்டோருக்கான நித்திய வசஸ்தலத்தை அடையாளப்படுத்துகிற இடமாக இருக்கலாம், அது பூமிக்கு வருவது போல் தோற்றமளிக்கிறது. இருப்பினும், இந்தக் கருத்து நிச்சயமற்றது, மேலும் நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை எப்படி நேரடிப் பொருளில் மொழிபெயர்க்கிறோம் என்பது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பேதுரு ஏற்கனவே பெரும் மாற்றமுள்ள அடிப்படைக் கருத்தை தொடர்ச்சியற்ற வித்தியாசங்களாக தற்போதைய மற்றும் வருங்காலத்திற்கிடையேயான கருத்துக்களைத் தர்க்க ரீதியாக உறுதிப்படுத்தியிருக்கிறார். "வானங்கள் மடமட வென்று அகன்றுபோம்," என்றும், "பூதங்களும் வெந்து உருகிப்போம்" என்றும் எழுதினார் (3:10). இப்பொழுது அப்போஸ்தலன் பழைய மற்றும் புதிய பூமிக்குமிடையே சில தொடர்புகள் இருக்கும் என்று சொல்லுகிறாரா? பரலோகம் என்பது பூமியையொத்த நிலைப்பாட்டில் இருக்குமா, ஆகிலும் மனிதர்களை தற்போதைய சூழலில் தொல்லையில் ஆட்படுத்தும் பாவம் மற்றும் பாடுகள் இல்லாமல் இருக்குமா? அதற்கு சாத்தியமுண்டு, ஆனால் ஒரு வேளை அப்படிப்பட்ட காரியத்தையே பேதுரு பேசவில்லை என்ற பொருளில் குறிப்பிட்டிருக்கலாம். ஒருவேளை அவர் விசுவாசிகளுக்கு உறுதியளித்து அவர்கள் நித்தியத்துக்கும் தேவனோடு வாசம் பண்ண ஏதுவான முன் ஏற்பாடுகளை செய்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கலாம். ஒருவேளை "புதிய வானம் புதிய பூமி" என்பது இரட்சிக்கப்பட்டவர்கள் எங்கோ ஒரு

இடத்தில் வாழ்வார்கள் என்று பொருள்படுத்தியிருக்கலாம். நித்திய ஜீவன் என்றால் ஏதோ ஒரு நிழல் உலகமாகவோ, பரிதபிக்கப்படத்தக்க இடமோ வெளிச்சமோ சந்தோஷசிரிப்போ இல்லாத இடமாக இராது. தேவன் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறார். பேதுரு நிச்சயப்படுத்தி முன்வைத்த நித்திய ஜீவனின் நித்திய நிலைப்பாட்டைக் குறித்து மேலும் யூகத்துக்கு இடமில்லாமல் அதன் இயல்புத்தன்மையை விவரித்துக் காட்டுகிறார்.

## ஜாக்கிரதையாயிருக்க ஓர் அழைப்பு (3:14-16)

**[14]ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். [15]மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; [16]எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.**

நிருபத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரும் அவர், தனது கிறிஸ்தவ நண்பர்கள் தேவ பக்தியை சகல ஜாக்கிரதையோடும் பற்றிக் கொள்ள அறிவுறுத்துகிறார். கிறிஸ்துவை அறிக்கையிடுதல் ஒரு காரியம்; விசுவாசத்தோடு வாழ்வது மற்றொரு காரியம். அப்போஸ்தலன் தனது வாசகர்களின் ஆவிக்குரிய நலனைக் குறித்த இரண்டு விஷயங்களைக் கொண்டிருந்தார். முதலாவதாக, காம விகார நடக்கைகளின் பயன்பாடு அவைளை விட்டுவிட்டவர்களையும் வசீகரிக்கக்கூடிய பலமுள்ளதாக இருந்தது. கள்ளப்போதகர்கள் சுய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாமிச பயன்பாடுகளை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களோடு அடையாளப்படுத்தி நியாயப்படுத்துவதை எதிர்த்து நிற்பது மிகவும் கடினமான காரியமாகும். மாம்ச விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வது தேவனோடு உள்ள ஒருவரது தொடர்பை பாதிக்கச் செய்யாது. என்பவர்களால் பேதுருவின் வாசகர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அப்படிப்பட்ட நடக்கையே, அவர்களை தேவனிடத்திலிருந்து பிரித்து விடும், என்று அப்போஸ்தலன் தர்க்கித்தார்.

சபை என்பது அறிக்கையிடும் ஒரு சமுதாயம். கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கொண்டுள்ள விசுவாசம் அவர்களைக் கட்டுப்படுத்துகிறது. நடத்தைகள் விசுவாசத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. பேதுருவின் இரண்டாவது அக்கறை கள்ளப் போதகர்கள் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை குறைவாகவே மதித்து நடந்தார்கள். உபதேசக் கோட்பாடுகள் நடக்கைகளுக்கு தொடர்பற்றவைகளல்ல. கிறிஸ்தவ உபதேசம் "கர்த்தராகிய இயேசு இரட்சிப்பை அருளும்படி தரிசனமாவார்" (எபிரெயர் 9:28) என்கிறது. தேவன் கோரும் பரிசுத்த வாழ்வு இயேசு ஒரு முறை மாம்சத்தில் வந்தார் என்பதைச்

சார்ந்திருக்கிறது, அவர் நியாயந்தீர்க்கும்படி மறுபடியும் வருவார். தனது நிருபத்தை நிறைவு செய்கிற வேளையில் பேதுரு தனது வாசகர்களுக்கு அந்தச் சிந்தனையையே கொடுக்க விரும்பினார்.

**வசனம் 14.** பிரியமானவர்களே என்றழைத்து அப்போஸ்தலன் தனது சக விசுவாசிகளிடம் தான் கொண்டிருந்த தனது அன்பை வெளிப்படுத்தினார். இந்த வார்த்தையை அவர் நான்கு முறை பயன்படுத்தினார் (3:1, 8, 14, 17). தான் பயன்படுத்தின புத்திமதி ஒரு குற்றச் சாட்டு அல்ல என்பதை தெளிவுப்படுத்தும்படி இந்த பாசமிகுவார்த்தையை பேதுரு பயன்படுத்தியிருப்பார் என்று ஒருவர் சந்தேகப்படலாம், அவசியமில்லாமல் அவர் அவர்களை கறையற்றவர்களும் குற்றமற்றவர்களுமாய் வாழ தவறிவிட்டார்கள் என்று குற்றஞ்சுமத்தவில்லை. அவர் அவர்களுடைய உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறார் (3:1). கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரைப் பின்பற்றி நடக்க வேண்டியவர்கள். 1 பேதுரு 1:19ல், இயேசுவின் இரத்தத்தைக் குறித்துப் பேசி, "குற்றமில்லாத மாசற்ற" ஆட்டுக் குட்டியானவர் என்று சொன்னார் (*amōmou kai aspilou*), இதே வார்த்தைதான் பரிசுத்த ஜீவியத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[10] இயேசுவின் நாமத்தை சுதந்தரித்துக் கொண்டிருக்கிறவர்கள் அவருடைய முன் உதாரணத்திலிருந்து தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ ஏவப்படுகிறார்கள்.

கிறிஸ்தவ இறைமையியல் கிறிஸ்தவ நடக்கையுடன் விடுவிக்கக் கூடாத அளவுக்கு கட்டுண்டிருக்கிறது. இயேசுவே கிறிஸ்து என்பதையும், அவர் மனித அவதாரத்தில் வந்த தெய்வம் என்பதையும் உறுதிப்படுத்துதல் மனித ஜீவியத்திலும் மேன்மையும் தனிச்சிறப்பும் உண்டு என உறுதிப்படுத்துவதாகும். மோசே இஸ்ரவேலருக்குச் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் முற்றிலும் பேதுருவின் வார்த்தைகளிலிருந்து வேறுபட்டவைகளல்ல. நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர் (மோசே) "ஆகையால், உயர வானத்திலும் தாழப் பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை இந்நாளில் அறிந்து, உன்மனதிலே சிந்தித்து" என்று எழுதினார் (உபாகமம் 4:39).

மோசே மற்றும் பேதுரு ஆகிய இருவருக்குமே, இந்த பொருள் ரீதியான பிரபஞ்சத்தில் மனித வரலாறு ஒரு இயந்திரத்தில் இருக்கும் பல் சக்கரம் போன்றதல்ல, இங்கே விதியின் விபத்து, மூளையற்ற நிகழ்வு நிலையில் கொண்டு விடும். ஒவ்வொரு தனிப்பட்டவரின் ஒழுக்கமும் முக்கியமானது. இது முக்கியமானது ஏனெனில் மேலே வானத்துக்கும் கீழே பூமிக்கும் தேவனாகிய அவர் "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களையும் புதிய பூமியையும்" ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஜனங்களாயிருக்க வேண்டுமென்றே புத்திமதிகள் கொடுக்கப்படுவதற்கு **நீங்கள் இவைகள் வரக் காத்திருக்கிறபடியால்** என்பதே காரணம். கிறிஸ்தவ உபதேசமே மரணம் மற்றும் முடிவுகாலத்தைப் பற்றியதுதான். வரலாறும் காலமும் வளர்ச்சியின் உச்சிநிலையை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. இயேசுவை கிறிஸ்துவென்று அறிக்கை செய்கிற எவரும் சாதாரணமாக தனது தெரிவைச் செய்துகொள்ள இயலாது. இந்தக் காரணத்தால்தான் பேதுரு **சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி** போதிக்கிறார்.

இந்தச் சொற்றொடரின் கூடுதல் பதம், "சமாதானத்தோடு" என்று

சொல்லப்படுவது எதிர்பாராமல் நடப்பது கடினம், இந்த குறுகிய நிருபத்தில் இப்பொழுது மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் மீண்டும் வரும்போது, பேதுருவுக்கு இருந்த நம்பிக்கை யாதெனில் அவரும் அவரது வாசகர்களும் தேவனுக்கு முன்பாக பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வு இல்லாமல் அவர் முன்நிற்க வேண்டும் என்பதே. “சமாதானததோடே” என்பது “இரட்சிக்கப்பட்டிருத்தல்” என பொருளாகும், ஆகிலும் அதிகமான மாற்று அர்த்தத்தையும் கொண்டுள்ளது. தேவனுடன் சமாதானம் என்பது சகோதர சகோதரிகளுடனான சமாதானத்தை வாழ்வில் கொண்டதாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் ஒருவர் உணரப்பட்ட சமாதானத்தின் ஆசீர்வாதங்களோடு நடமாடுகிறார், அந்த சமாதானம் சபைக்குள்ளாக, பூமியிலுள்ள அவரது ராஜ்யமாக, இன்னும் வரவிருக்கிற மற்றும் உணரக்கூடிய சமாதானம் அவருடைய புதிய வானம் புதிய பூமியில் காணப்படும்.

**வசனம் 15.** தேவனில் விசுவாசம் கொண்டிருக்கிறவர்களும் கூட அவர் சொல்லுவதை செய்யவும் தமது நற்காலத்தில் செய்யப்போகிறவைகளைப் பெறவும் செயல்படுத்த காத்திருக்கக் கூடாமல் அதைக் கடினமாய்க் கண்டார்கள். கள்ளப் போதகர்கள் அதைத் தங்களுக்கு ஆதாயமாக்கினார்கள். “அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?” என்று அவர்கள் கேட்டார்கள் (3:4). அப்போஸ்தலர்களின் உபதேசங்களின் செய்தி தவறு என்று கள்ளப் போதகர்கள் விளக்கமளித்தனர். அவர் வரப் போவதில்லை, குறைந்த பட்சம் நேரடியான வருகை என்று ஒன்று இல்லை, என்றனர். பேதுருவின் விளக்கம் வித்தியாசமாயிருந்தது. அப்போஸ்தலன் குறிப்பிடுகையில் தேவன் தாமதமாயிருக்கிறார் என்றால், அது “ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருப்பதால்” தான் என்று சொன்னார் (3:9). பிறகு இத்துடன் வசனம் 14ல் அந்த சிந்தனையுடன் கூட்டிப் பேசினார். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருடைய வருகை இல்லாமல் கடந்து செல்லுகிற ஒவ்வொரு நாளையும் குறித்து நன்றியுடன் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும் என்று பேதுரு சொன்னார். நியாயத்தீர்ப்பும் நித்தியமும் தாமதித்தாலும் நன்றியறிதலோடு அவர்கள் அவரை நோக்கிப் பார்க்க வேண்டியவர்கள். அவர் தாமதிக்கிறார் என்பது அவரது பொறுமை இன்னமும் அவருக்குள் கிரியை செய்கிறது என்று பொருள். விசுவாசிகள் **கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று எண்ணவேண்டும்,** அதாவது ஒரு எண்ணிறைந்த ஜனக்கூட்டத்துக்கு தேவன் மனந்திரும்புதலை அருளிச் செய்து “இரட்சிப்பை” அளிப்பார் என்பது இதன் பொருள். “அவருடைய வருகை” உணரப்படும் போது, “இரட்சிப்பிற்கான” கதவு மூடப்படும்.

இந்த வசனப்பகுதியில், பேதுரு பவுல் எழுதின நிருபங்களை ஒப்பிடுகிறார். பவுல் தாமே எழுதின நிருபங்களின் குறிப்புகளுக்கு அப்பால், இது மட்டுமே பவுல்தான் பல நிருபங்களை எழுதினவர் என்பதைச் சுட்டிக் காட்டும் ஒரே புதிய ஏற்பாட்டு வசனம் இது. இப்படிப்பட்ட குறிப்புகள் எதுவும் அப்போஸ்தல நடபடிகளில் இல்லை என்பதால், இது மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. பவுலின் நிருபங்கள் சபைவரலாற்றில் மிகப் பெரிய பரந்த இடத்தைப் பிடித்திருந்தும், அவைகள் ஏன் லூக்காவால்

எந்த இடத்திலும் குறிப்பிடப்பட வில்லை என்பதை கற்பனை செய்து பார்க்கக் கூட கடினமானதாயிருக்கிறது. என்ன காரணமாக இருந்திருந்த போதிலும், பேதுருவின் இரண்டாவது நிருபத்தில் புதிய ஏற்பாட்டில் பவுலினால் குறிப்பிடப்படாத பவுலின் நிருபம் பற்றிய குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கேயும் கூட, பவுலின் நிருபங்களுக்கு பேதுருவின் குறிப்பு எதிர்பாராத அதே நேரத்தில் முக்கிய கருத்தை சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. அவர் அவைகளில் ஆர்வம் காட்டுகிறார், ஏனெனில் கள்ளப் போதகர்கள் பவுலின் செய்திகளின் உண்மையைத் திரித்துக் கூறுபவர்களாயிருந்தனர். தானும் பவுலும் ஒரே செய்தியைத்தான் பிரசங்கித்தார்கள் என்பதை அவர் தெளிவாக்க விரும்பினார். ஒருவகையில் பேதுருவின் வார்த்தைகளில் நியாயமான அனுமானங்கள் புதிய ஏற்பாட்டைத் தொகுத்த கேள்விகளின் அடிப்படையில் காணப்படக் கூடும், ஆனாலும் அப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் பேதுருவின் பிரதான அக்கறைகளில் எதிர்பார்க்கப்படாதவை.

பேதுரு ஒரு காரணத்துக்காக பவுலின் நிருபங்களை குறிப்பிட்டிருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது: அவைகளில் பேதுரு கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்த அதே போதனையைத்தான் அவரும் (பவுலும்) கொடுத்திருக்கிறார், அவை, "நம்முடைய கர்த்தருடைய பொறுமையை இரட்சிப்பாக எண்ணுங்கள்" என்று சொன்னார். பவுலும், **தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே** இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான், என்று சொல்லி பேதுரு போதித்த செய்தியையே அவரும் போதித்தார் என்று குறிப்பிட்டார். சபையின் இந்த இரண்டு தூண்களுக்கு இடையே போட்டி பொறாமைகளோ பிரிவினைகளோ இருக்கவில்லை.

வாசகர்கள் ஒருவேளை பவுல் எழுதின எந்த வசனப் பகுதியை மனதிற்கொண்டு பேதுரு குறிப்பிட்டிருப்பார் என்ற கேள்வி கலந்த ஆச்சரியத்துடன் பார்த்திருக்கக் கூடும். இது ஒரு சாதாரணமான கேள்வியல்ல. 2 பேதுரு நிருபம் 60ம் வருடங்கள் வாக்கில் எழுதப்பட்டிருந்தால், பிறகு பவுலின் பெரும் பாலான நிருபங்கள் ஏற்கனவே எழுதிமுடிக்கப்பட்ட நிலையில் இருந்திருக்க வேண்டும். இருப்பினும், இவைகளில் எந்த நிருபம் பேதுருவுக்கும் அவருடைய வாசகர்களுக்கும் பரிச்சயமானதாக இருந்திருக்கக் கூடும் என்று நமக்குத் தெரியாது. ஒரு சாத்தியக்கூறு அது ரோமர் நிருபமாக இருக்கலாம். பேதுருவைப் போன்ற உள்ளான உணர்விலேயே, பவுலும் ரோமர்களுக்கு எழுதியிருக்க சாத்தியமுண்டு: "அல்லது தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?" என்றார் (ரோமர் 2:4).

*முகவுரையில்* குறிப்பிட்டது போல, 2 பேதுரு நிருபத்தை 40 ம் ஆண்டுகளின் கடைசியில் எழுதியிருந்தால், புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்படாத பவுலின் வேறே நிருபங்கள் குறித்து பேதுரு சுட்டிக் காட்டியிருக்க வாய்ப்புண்டு. அதுதான் உண்மையெனில், அது நமக்கு பவுலின் நிருபங்களிலிருந்து பேதுருவின் நிருபத்தில் காணும் அநேகக் காரியங்களை கண்டுபிடிக்க உதவியிருக்காது.

**வசனம் 16.** இது வரைக்கும் நிச்சயம்: பேதுருவுக்கும் அவருடைய வாசகர்களுக்கும் தெரிந்திருந்த பவுலால் எழுதப்பட்ட நிருபங்கள் என அறியப்பட்டிருந்த சில புத்தகங்கள் இருந்தன. பேதுரு பவுலை தனக்கு

கூட்டாளியாக சேர்த்திருக்கக் கூடும். **அவருடைய எல்லா நிருபங்களிலும்** பவுல் **இவைகளைக் குறித்துப்** பேசியிருக்கிறார். அவைகளை பேதுரு எழுதின சபைகளுக்கே எழுதியும் இருக்கிறார். உள்ளூர் சபைகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ள முயற்சித்த கள்ளப் போதகர்களுக்கு முன்பாக பேதுருவும் பவுலும் ஒன்றாக நின்றார்கள். குறிப்பாக, கர்த்தருடைய வருகையின் தாமதம் குறித்த கருத்தில் இருவரும் ஒருமித்து நின்றார்கள். தாமதம் என்பது இன்னும் மனந்திரும்புவோருக்கு இரட்சிக்கப்பட்ட ஏதுவாகும் என்று இருவருமே போதித்தார்கள்.

தங்களுக்கே உயர்வான அறிவு இருப்பதாகச் சொல்லிக் கொண்ட போதிலும், கள்ளப் போதகர்கள் கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களுமாயிருந்தார்கள். அவர்கள் பவுலின் நிருபத்திலிருந்து அறிகிறதற்கு அரிதாயிருக்கிற சில காரியங்களை எடுத்துக் கொண்டு, மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போல இவைகளையும் புரட்டுகிறார்கள். “அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது” எனும் பதம் *(dusnoētos)* புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பேயும் இது அரிதான வார்த்தையே. ஆகிலும் *Shepherd of Hermas,* என்ற இரண்டாம் - நூற்றாண்டு நூலில் அதை எழுதிய ஆசிரியரால், காணப்பட்ட தரிசனம் புரிந்து கொள்ளப்படவோ விளக்கிச்சொல்லவோ இயலாத தன்மைக்குப் பயன்படுத்தப்பட்டது.[11] பேதுரு எந்த ஒரு தரிசனத்தையும் குறிப்பிடாமல், பவுல் எழுதின சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது என்றும் புரட்டக் கூடியவைகளுமாயிருந்தன என்றும் சொன்னார். பவுலின் எழுத்துக்களிலும் “மற்ற வேத வசனங்களிலும்” அறிந்து கொள்ள அரிதான காரியங்கள் இருந்துள்ளன என்பது இரு பொருள்பட எழுதப்பட்ட விதம் என்பதை சாட்சியமளிக்கிறது.

எழுத்து வடிவத்தில், தேவன் தம்முடைய சிருஷ்டிகளிடத்தில் தகவல் பரிமாற்றத்தின் நிமித்தம் வேறு விதமான மொழிநடையில் தொடர்பு கொண்டிருந்திருக்கக் கூடும், மனுஷர்கள் மனதிலே அவர் நேரடி வெளிப்பாடுகள் மூலம் நிலைநாட்டியிருக்கக் கூடும். தேவன் நம்மை சில தப்பவிடாத முறையில் அவர் யார், அவர் தமது ஜனங்களிடத்தில் எதிர்பார்ப்பது என்ன, கிறிஸ்துவின் அடையாளக் குறிப்பு, இது போன்ற திரளான காரியங்களால் நம்மை நிரப்பியிருக்கக் கூடும். அவர் இப்படியாகத் தம்மை வெளிப்படுத்தியிருக்கக் கூடும், ஆனாலும் அவர் வேறு வழியைத் தெரிந்து கொண்டார். தேவன் தமது ஜனங்களிடத்தில் தம்மை வெளிப்படுத்த மொழியில் பேசவேண்டுமென்று தெரிவு செய்து கொண்டார். மொழியே பேசுகிற நபர்களுக்கிடையேயான இடையீட்டாளராக அருக்கும்போது, அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட கூடும், புரிந்து கொள்ளச் செய்யும். கூடுதலாக, திரித்துக் சிறுவயதிலே குறிப்பாய் இருப்பவர்கள் அதைத் திரித்துக் கூறுவார்கள்.

பல பொருள்பட பேசப்படும் மொழியின் முன், சத்தியத்தை அறிய விருப்பமுள்ள சிலர் அதைக் கை விட்டுவிடக் கூடும். கொள்கை ரீதியான போதனைகள் தங்களுக்கு வசதியாகத் தெரியாத போது அவர்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத் தன்மையின் அறிக்கையிடலில் பிரதிபலிப்பார்கள். கிறிஸ்தவம் உறுதியாக நிச்சயித்துக் கொள்ளுதலில் தொடங்கி அதிலே நிறைவு பெறுகிறது: தேவன் சிருஷ்டிகர். இயேசு கிறிஸ்து மேசியா.

நமக்குப்பதிலாக இயேசு சிலுவையில் மரித்தார். அவரே இரட்சிப்பிற்குக் காரணர். அவர் மறுபடியும் வருவார். இந்த வார்த்தைகளின் மொழி பல பொருள் கொண்டவைகள், ஆகிலும் நம்பிக்கையிழக்கும் அளவுக்கு பல அர்த்தங்களைக் கொடுப்பவையல்ல, மேலும், "புரிந்து கொள்ள கடினமான காரியங்களெல்லாம்," முக்கியமற்றவைகளோ, சுலபமாக கண்டுகொள்ளாமல் விட்டு விடுகிற காரியங்களோ, கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாதவைகளோ அல்ல. பேதுருவின் வார்த்தைகள், சாய்ந்த நிலையிலான ஒரு வகையில், விசுவாசிகளுக்கு மாணவர்களாக இருக்க அழைப்பு விடுக்கின்றன. விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் "புரிந்து கொள்ளக் கடினமானவைகளை" புறம்தள்ளி, விடுகிறார்கள் ஆனால் கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் உண்மையில் "**தங்களுக்கும் கேடு வரத்தக்கதாக** புரட்டுகிறார்கள்" என்று கூட ஒருவர் கூறலாம்.

கள்ளப் போதகர்கள் "மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறது போல" பவுலுடைய நிருபங்களையும் "புரட்டுகிறார்கள்" என்ற பேதுருவின் வாக்கியம் முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. "வேத வாக்கியங்கள்" *(graphe)* கிரேக்க மொழியில் ஒரு பொதுச் சொல்லில் பேசப்படுகிறது; அதாவது, அது எந்த எழுதப்பட்ட வாக்கியத்துக்கும் பொருந்தும். காலத்தினூடே அது ஒரு பொருள் நுணுக்கமுள்ள வார்த்தையாயிற்று. முன்பு யூதர்களும் பின்பு கிறிஸ்தவர்களும் தங்களுடைய புராதன பதிவேடுகளை மனுஷனால் எழுதப்பட்டதற்கு மேலானதாக முழு நிச்சயமாய் நினைத்தனர். தேவன் தெரிந்து கொண்ட மனுஷர்கள் மூலமாக அவர்களுக்குள் தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்து, அவர்கள் எழுதியவைகள் தேவனுடைய வார்த்தைகள் தான், என்று சொல்லப்படுவதை அவர்கள் விசுவாசித்தார்கள், அவைகளின் ஆசிரியர்கள் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதை, இது பறை சாற்றுகிறது. ஒருவகையில் ஏவப்பட்டது என்பது எழுதுவதற்கான காரியங்களை பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடே தூண்டுதல் மூலமாக கிரியை செய்து தேவபக்திக்குரிய கனியைக் கொடுக்கத்தக்க வகையில் ஜனங்களுக்குள்ளும் கிரியை செய்கிறது என்றும் ஏவப்படுதல் அர்த்தப்படுகிறது. "வேத எழுத்துக்கள்" அல்லது "வேதவாக்கியங்கள்" பொருள் நுணுக்கமுள்ள வார்த்தையாக ஏவப்பட்டு எழுதப்பட்டதை அடையாளப்படுத்துகிறது. தேவ பக்தியுள்ள ஜனங்கள் அவைகளை உயர்ந்த மதிப்பீட்டில் வைத்தார்கள், அவை தேவனிடத்திலிருந்து வந்தவை என்று கருதி, சில விசேஷித்த பொருளில், அவருடைய வார்த்தையாகவும் மனிதர்களை ஆசிரியர்களாகக் கொண்டும் எழுதப்பட்டவையாக கருதினார்கள்.

புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டு வந்த காலக்கட்டத்தில், "வேத வாக்கியங்கள்" எனும் வார்த்தை இன்றைய கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அன்றைய கிறிஸ்தவர்களுக்கு அவை நீர்மம் போன்று தடையற்ற புரிந்து கொள்ளுதலைக் கொடுத்தது. "வேத வாக்கியங்கள்" கூடிவந்த கூட்டத்தாருக்கு ஜெப ஆலயங்களிலோ அல்லது சபையிலோ வாசிக்க ஏதுவான எழுத்துக்களாக இருந்தன. "வேத வாக்கியங்களின்" தலைப்பில் சரியாக உள்ளடங்கியவை யாவை, அவைகளில் வராத புத்தகங்கள் யாவை என்பதில் சில உறுதிப்படுத்த இயலாதவைகளாயிருந்தன. ஆகிலும், எழுதப்பட்டவைகளில் ஏவப்பட்ட வேத எழுத்துக்கள் பிரச்சனைக்குரியவைகளாக மாறிப்போயின என்று

உறுதியாகச் சொல்ல இயலவில்லை. பழங்காலப் பிரதிகளில் உண்மையில் எது வேதவாக்கியம் என்று யார் முடிவுசெய்தது? பழங்காலப் பிரதிகளில் எந்தப் பிரதி, உண்மையில், வேத எழுத்துக்களாகத் தீர்மானிக்கப்பட்டது? எந்தப் புத்தகம் ஏவப்பட்டது? காலத்தினூடே பொது இசைவு ஏற்பட்டது. தனது ஊழியர்களை ஏவி எழுதப்பணித்த அதே தேவன் தான் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள புத்தகங்களே தேவனிடத்திலிருந்து வந்தவை என்று தமது மக்களை மூலமாக கொண்டு வந்துள்ளார் என்பது கிறிஸ்தவ விசுவாசம். அளவிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட அந்தப் புத்தகங்கள், தேவனுடைய முன் அளிப்பினால் ஏவும்படி தீர்மானிக்கப்பட்ட அந்தப் புத்தகங்கள்தான், “கிறிஸ்தவ விசுவாசத்திற்கென தொகுக்கப்பட்ட விதிமுறைப் புத்தகங்கள்” என்று அழைக்கப்பட்டன.

இயேசுவின் நாட்களில், எபிரெய வேதம் கிறிஸ்தவ விதிமுறைப் புத்தகமாக நிர்ணயிக்கப்பட்டதாகக் காணப்படுகிறது (லூக்கா 24:44). அவைகள் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தாலும், அதன் புத்தகங்கள் நமது பழைய ஏற்பாட்டில் வரிசைப்படுத்தப்பட்ட முப்பத்தொன்பது சமரீதியான முறையில் கொண்டுள்ளது. இதற்கு மாறாக, சபையின் துவக்க நாட்களில் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எழுதப்பட்டு சேர்க்கப்படும் செயலில் இருந்தன. பேதுரு பவுலின் நிருபங்களை “மற்ற வேத வசனங்கள்” என்ற அதே சமகுழுவில் வைத்த போது, அநேகமாக அவர் பழைய ஏற்பாட்டு வேத வசனங்களையே குறிப்பிட்டிருக்கக் கூடும். மற்றபடி வேறு ஏதாவது அப்போஸ்தலர்களின் பதிவேடுகளை ஒரு வேளை மனதில் கொண்டிருந்தாரா என்று தெரியவில்லை.

பவுலின் நிருபங்கள் ஏவப்பட்டவைகளே என்று பேதுரு குறிப்பிட்டார். அவைகள் சபைக்கு அதிகாரமளிப்பவைகளாயிருந்தன. பேதுரு மரித்தபின் ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டுகளில் தேவனுடைய ஆவியானவர் அவருடைய சபைக்குள்ளாகவே கிரியை செய்து, குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள புத்தகங்களை, பவுலின் பதிமூன்று நிருபங்கள் மற்றும் பேதுருவால் எழுதப்பட்ட இரண்டு நிருபங்கள் உட்பட, அவைகளை நிர்ணயிக்கப்பட்ட கிறிஸ்தவ விசுவாச சட்டதிட்டங்களின் தொகுப்பாக்க ஏதுவாகக் கொடுக்கப்பட்டன. அந்த எழுத்துக்கள் சபை எவைகளை விசுவாசிக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் மற்றும் எப்படி இருக்க வேண்டும் போன்றவைகளுக்கான சட்ட விதிமுறைகளாயின. காலம் வந்தபோது அந்த இருபத்தியேழு புத்தகங்களும் புதிய ஏற்பாடு என்றழைக்கப்பட்டன. நல்ல காரணத்துக்காகவே “வேத வாக்கியங்கள்” இன்றைய சபைக்குக் கொடுக்கப்பட்டது என்பது பழைய புதிய ஏற்பாடுகளின் அறுபத்திஆறு புத்தகங்களைக் குறிக்கும்.

## பயன்பாடு

### கர்த்தருடைய நாளைத் துரிதப்படுத்துதல் (3:1-16)

திருமறை பின்வரும் சாரம்ஸங்களைக் கொண்டதாகச் சொல்லப்படுவதுண்டு: (1) பழைய ஏற்பாட்டின் மையக்கருத்து “யாரே ஒருவர் வருகிறார்” என்பதாகும். (2) நான்கு சுவிசேஷ புத்தங்களின் மையக் கருத்து “யாரோ ஒருவர் இங்கே (வந்து) உள்ளார்.” (3) புதிய ஏற்பாட்டின்

மீதிப் புத்தகங்களின் மையக் கருத்து "யாரோ ஒருவர் மறுபடியும் வருகிறார்" என்பது தான். பேதுரு தனது இரண்டாவது நிருபத்தை எழுதுகையில் அதற்கு முன்பு பத்து வருடங்களாகவோ அதற்கு மேலாகவோ கிறிஸ்தவர்களாக வாழ்ந்தவர்களுக்கு எழுதுகிறார். கர்த்தர் மறுபடியும் வரப் போகிறார் என்று அவர்கள் புரிந்து கொண்டிருந்தனர். வருடங்கள் கடந்தன, அவர்களின் வாழ்க்கை வழக்கம்போல் தொடர்ந்தன. பேதுரு இந்த நிருபத்தை அவர்களுடன் விவாதித்து அவர்கள் கேள்வியுற்றது சரியே என்று தனது வாசகர்களுக்கு மறு உத்திரவாதம் அளித்து, நிருபத்தை நிறைவு செய்கிறார்: கர்த்தர் மறுபடியும் வருவார். அவர்கள் இந்த உபதேசங்களை புரிந்து கொண்டதை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்:

*(1) இந்த உலகம் கர்த்தரால் நியமிக்கப்பட்ட முடிவை நோக்கி நகந்து கொண்டுள்ளது என்று நம்பினவர்களைப் பரியாசம் செய்யும் பரியாசகாரர்களும்* சந்தேகிப்பவர்களும் எப்பொழுதும் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். உலகக் கண்ணோட்டத்தில் காணப்படும் கிறிஸ்தவர்களுக்கும் விசுவாசியாதவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம், என்னவென்றால் கிறிஸ்தவர்கள் இந்த உலகம் எங்கோ போய்க் கொண்டுள்ளது என்று அறிவார்கள். அது ஒரு முடிவினிமித்தம் துரிதப்படுத்துதலும், ஒரு நியாயத்தீர்ப்பில் எல்லாரும் தேவனுக்குமுன்பாக நிற்பதும் கணக்கொப்புவித்தலையும் காட்டுகிறது (2 கொரிந்தியர் 5:10). அவிசுவாசிகளுக்கு உள்ள நம்பிக்கை இயற்கையில் அவர்கள் பார்க்கிற உலகச் செயல் கிரியைகளுக்கப்பால் எதுவுமில்லை. எல்லாமே அதனதன் நிலையில் நிற்கிறது. உலகம் ஒருவேளை எதிர்பாராத முடிவுக்கோ அல்லது ஒரு பெலவீனத்தை அடைய ஏதுவாக்கும் முடிவுக்கோ வரும், அப்படி நடக்கும் போது அது எதையும் அர்த்தப்படுத்தாது. அவிசுவாசிகளைப் பொறுத்த மட்டில், மனித ஜீவியமும் பருப்பொருள் உலகமும் ஆகிய எல்லாமே இப்பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட திடீர் நிகழ்ச்சியே, அதற்கென ஒரு வடிவமோ திட்டமோ இல்லை. அவர்களைப் பொறுத்த மட்டில், பவுல் சொன்னதுபோல ஜனங்கள் "புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்" என்கிற நிலையில் இருக்கக் கூடும் (1 கொரிந்தியர் 15:32) இருந்தும் நிச்சயமாயிருங்கள். அது கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் "கண்மூடித்தனமான" விசுவாசமோ மற்றும் சந்தேகப்படுகிறவர்களிடத்தில் காணும் அவிசுவாசமே போல அல்ல. அவிசுவாசிகள் தங்கள் நித்தியத்தை தங்கள் சந்தேகத்தின் மேல் நிலைத்திருக்கச் செய்கின்றனர். தேவன் தாமே தம்மை வெளிப்படுத்தினார் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். அது மாத்திரமல்ல, தேவனே இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக மீட்பராக வந்தார் என்று நம்புவதற்கு காரணத்தையும் கொண்டிருக்கிறார்கள். பரியாசம் பண்ணும் சந்தேகப்பேர் வழிகள் எப்போதும் இருப்பார்கள். பேதுரு தன்னுடைய வாசகர்கள் இவைகளை எதிர்பார்த்திருக்க வேண்டுமென்று விரும்பினார். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து ஆளுகை செய்கிறார் என்கிற உண்மையை இவர்களின் சந்தேகமும் பரியாசமும் மாற்றிவிட முடியாது. அவர் மீண்டும் வருகிறார் என்கிற நிச்சயத்தையும் மாற்றிவிட முடியாது.

*(2) தேவனுடைய நீடிய பொறுமைக்கு ஒரு வரலாறு உண்டு; ஆகிலும் முடிவில், அவர் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்.*

கிறிஸ்தவர்களை பேதுரு ஜலப்பிரளயக் காலத்துக்குச் சுட்டிக் காட்டுகிறார். பேதுரு தனது இரண்டு குறு நிருபங்களில் நோவாவைக் குறித்து மூன்று முறை நினைவு கூருகிறார் (1 பேதுரு 3:20; 2 பேதுரு 2:5; 3:5, 6). ஒவ்வொரு நிகழ்விலும் தேவன் உலகத்தை பாவத்துக்குக் கணக்கு ஒப்புவித்தலை கோரினார் என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டார். கடைசி நிகழ்ச்சியில் (3:5, 6) அவர் விசுவாசிகளுக்கு நினைவுறுத்தி தேவன் நியாயத்தீர்ப்பை முதல் நாளில் அறிவித்து மறுநாளிலே அதை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. நோவா உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து "நீதிக்கு சுதந்தரவாளியானான்" (எபிரெயர் 11:7). உலகம் அவருக்கு செவி சாய்க்கவில்லை. வருடங்கள் கடந்தன, ஆனால் தேவன் முடிவில் தாம் அறிவித்த நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார்.

பேதுரு வேறு அநேக உதாரணங்களை மேற்கோள் காட்டியிருக்கக் கூடும், எரேமியா பல பத்தாண்டுக் கணக்காக யூதா மற்றும் எருசலேமை எச்சரித்து அவர்கள் மீது தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவார் என்று எச்சரித்தார். ஒரு சிலர் மட்டும் செவி சாய்த்தனர். ஜனங்கள் மனந்திரும்பப் போதிய சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தனர். மாறாக, அவர்கள் தீர்க்கதரிசியை பரியாசம் பண்ணினார்கள். எரேமியா சோர்வுற்று தனது ஊழியத்தை விட்டு விட மனதாயிருந்தார் (எரேமியா 20:7). முடிவில், தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார். எருசலேம் அழிவுண்டது; ஜனங்கள் வெட்டுண்டார்கள் அல்லது அடிமைத்தனத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். தேவன் ஜனங்களிடத்தில் பொறுமையோடே செயலாற்றுகிறார், ஆனாலும் அவரது வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படுவது நிச்சயம்.

*(3) மனித வர்க்கத்தின் அனைத்து பகட்டுக் காரியங்களும் மகிமைகளும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குட்படும்.* அவிசுவாசிகள் பெரும்பாலும் இந்த முன்னுக்குப்பின் முரணான நூதனக் காரியங்களைக் கொண்டுள்ளனர்: முதலாவதாக, மனித வாழ்வு என்பது உயிர்நூல் ஆராய்ச்சி, மற்றும் பரிணாமச்சங்கிலியின் முடிவு நிலையைக்காட்டிலும் வேறொன்றுமில்லை என்று யூகிக்கின்றனர். மனிதர்களாக இருப்பது ஒரு விட்டில் பூச்சி அல்லது வாலில்லா (மனிதக்) குரங்கைக் காட்டிலும் வித்தியாசமான ஜீவிகளின் வகையல்ல. தர்க்க ரீதியாகப் பார்த்தாலும், ஒரு நபருடைய மரணம் என்பது ஒரு வயல் எலியின் சாவைக் காட்டிலும் மேன்மையானது அல்ல. ஒரு புலனறிவுப் பொருள் ஆய்வாளர் தர்க்கித்து, அவிசுவாசியின் முன்னறிவற்ற கூற்றுகளைக் குறிப்பிட்டு, மனித இனம் பூமியில் வியாதிகளாயிருக்கிறது, வாழ்க்கையின் ஆய்வைக் கெடுத்து அவைகளின் வாழ்வமைப்பையும் அழித்துப் போடுகின்றனர். அவர்களில்லாத பூமிசிறப்பானதாயிருக்கும் என்கின்றனர்.

அவிசுவாசிகளின் இந்தக் கூற்றுக்கள் உண்மையாக இருப்பின், அவர்கள் இப்படியொரு முடிவை எப்படி எட்டியிருக்கக் கூடும் என்பதை ஒருவர் புரிந்து கொள்ளக் கூடும். ஆகிலும் அதே அவிசுவாசிகள், மனித வாழ்வு வெறுமையானது என்ற முடிவுக்கு வருகிற அதே வேளையில், மனித வாழ்க்கையில் எல்லாவற்றையும் அடைய முயற்சிக்கின்றனர். ஜனங்கள் இன்னமும் வானளாவிய கோபுரத்தைப் பார்ப்பதில் பிரியமாயிருக்கின்றனர் (ஆதியாகமம் 11:4) மேலும் தங்கள் சாதனைகளில் ஆச்சரியப்படுகின்றனர். அவர்கள் சொல்லுகிறதாவது, நாம் கட்டின வானாளவிய கட்டிடங்களைப்

*பாருங்கள், நமது எண்ணெய்க் கிணறுகளையும், நமது பெரிய கப்பல்களையும், நமது பெரிய குழாய் வழிகளின் அமைப்புகள், நமது சாலைகள் பாலங்கள் ஆகிய அனைத்தையும் பாருங்கள். "நாம் எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கக் கூட்டம். நாம் சாதிக்கக் கூடாதது எதுவுமில்லை," என்கின்றனர்.*

*மனுஷர்கள் தங்களுக்குத் தாங்களே தேவர்களாக்கிக் கொள்கின்றனர். சமுதாயத்தில் மற்றவர்கள் சாதிக்காதவைகளை தாங்கள் சாதித்துவிட்டதாகக் கூறும் மனுஷ சாதனைகளில் மேன்மை பாராட்டுவோருக்கு நாம் நினைப்பூட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒருவரையொருவர் கொலை செய்வதை நாம் இன்னும் நிறுத்திய பாடில்லை. யுத்தங்கள் தொடர்ந்து பெருகுகின்றன. பகைமை தெருக்களையும் அதிலுள்ள வீடுகளையும் பாதிக்கின்றன. பிள்ளைகள் மதுபானத்துக்குத் திரும்புகின்றன. புருஷர்கள் மனைவிகள் ஒன்றாக வாழும் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அளவுக்கு மிஞ்சின வல்லமையான உண்மை சக்தி அகன்று போவதில்லை: பழைய பாடல் ஒன்றில், "நாம் சமவெளியில் ஒவ்வொருவராக கீழே இறங்குகிறோம்," என்ற வார்த்தைகள் இடம் பெற்றுள்ளபடி நிகழ்கிறது.[12] மனுஷர்கள் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என்று குறிப்பால் உணர்த்தும் ஜனங்களுக்கு மரணம் இன்னமும் கோரிக்கை விடுகிறது. பேதுருவின் எச்சரிக்கைகள் கண்டு கொள்ளாமல் விடப்படுவது கடினம். பூமியும் வானங்களும், மனுஷனுடைய சகல மேன்மையும் பகட்டும், அழிவுண்டுபோம், தேவன் இந்த உலகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார், ஞானமுள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் தங்கள் பகுதியில் தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ வேண்டியவர்கள். பேதுரு, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப் பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" என்று பிரகடனம் செய்தார் (2 பேதுரு 3:11).*

*முடிவுரை.* பேதுருவின் எச்சரிக்கைகளெல்லாம் கடுமையானவை, ஆனால் அதே வேளையில் அவர் அதிலே நம்பிக்கையையும் கொடுக்கிறார். அவர் தனது ஜனங்களிடத்தில் இந்த உலகம் ஒரு முடிவுக்கு வந்த பிறகு, தேவன் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் உண்டாக்குவார் என்று சொன்னார். அதிலே நீதி வாசமாயிருக்கும் (2 பேதுரு 3:13). பேதுருவோ வேறெந்த புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களோ அவசியமில்லாத யூகத்துக்கு இடமளித்து அந்த புதிய உலகம் எப்படியிருக்கும் என்று கூறவில்லை, தேவன் தமது ஜனங்களுக்கு உரிய பராமரிப்பைச் செயல்படுத்துவார் என்று தேவனை நம்பவேண்டும்.

## "வாக்குத்தத்தம் எங்கே?" (3:4)

கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆரம்பநாட்களிலிருந்து, பரியாசக்காரர்கள் விசுவாசிகளை கர்த்தருடைய வருகையைக் குறித்த விஷயத்தில் இகழ்ச்சியாகவே பேசி வந்துள்ளனர். "நீங்கள் அந்த எண்ணத்தை ஏன் விட்டுவிடக் கூடாது?" என்பது அவர்களின் கோரிக்கை. நூற்றாண்டுகளினூடே விசுவாசிகள் தங்கள் நம்பிக்கையை வாழவைத்துக் கொண்டுள்ளனர். ஒரு பழங்கால பிரசங்கம் எஞ்சி வாழ்ந்து உயிரோட்டமுள்ளதாயிருக்கிறது, அது அநேகமாக இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டிருக்கக் கூடும். அதை எழுதியது யார் என்று தெரியாவிட்டாலும் "2ம் கிளெமெண்ட்" எனும் பெயரில் போகிறது. வேறுபல எழுத்துக்களுக்கிடையே அது மிகச் சிறப்பாக -

எழுதப்பட்டுள்ளது. அது சொல்லுகிறதாவது,

> தங்களில் சந்தேகம் கொண்டுள்ள இருமனமுள்ளவர்கள் பரிதாபத்துக் குரியவர்கள், அவர்கள், இந்தக் காரியங்களை வெகுநாட்களுக்கு முன்பிருந்த நாம் கேள்வியுற்றிருக்கிறோம். மேலும் நமது பிதாக்களின் காலத்திலும் கேள்விப்பட்டுள்ளோம், ஆகிலும் நாம் நாளுக்கு நாள் காத்திருந்தோம், அவைகளில் ஒன்றையும் நாம் காணவில்லை என்கின்றனர். ஓ மதியீன மனுஷர்களே! உங்களை ஒரு மரத்துக்கு ஒப்பிட்டுப் பாருங்கள், ஒரு திராட்சைச் செடியை எடுத்துக் கொள்ளுங்கள்; முதலாவது அவை தன் இலையை விடுகிறது, பிறகு பூ மொக்கு விடுகிறது, அதன் பிறகு திராட்சக் காய்களையும், பிறகு முழுமையான கனிகள் நிறைந்த குலைகளைத் தருகிறது, அதேபோல் தான் என்னுடைய ஜனங்கள் குழப்பம் மிகுந்தவர்களும் பாடுகள் நிறைந்தவர்களுமாயிருக்கிறார்கள்; அதற்குப் பிறகு அது நல்ல காரியங்களைப் பெற்றுக் கொள்ளும். ஆகையால், என் சகோதரரே, நாம் இரு மனமுள்ளவர்களாயிருக்க வேண்டாம், ஆனால் நாம் நம்பிக்கையிலே பொறுமையாயிருந்து, நாமும் நற்பலனை அடைவோமாக.[13]

அது பேதுருவின் நாட்களாயிருந்தாலும் அல்லது கிளெமெண்டின் நாட்களாயிருந்தாலும், அல்லது தற்போதைய சந்ததியாக இருந்தாலும், கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்து சந்தேகிக்கவோ அல்லது அந்தக் கருத்தையே விட்டுவிடவோ கூடிய சோதனை இருந்து கொண்டே தான் இருக்கும். ஆனாலும் கர்த்தருடைய மறு வருகையின் வாக்குத்தத்தமும் அந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றமும் கிறிஸ்தவ செய்தியின் இருதயத்துக்கடுத்ததாக இருக்கிறது. அவர் ஒருமுறை நாசரேத்தில் ஊழியக்காரனாக வந்தார்; அவர் மறுபடியும் வரும்போது கர்த்தாதி கர்த்தாவாக ராஜாதிராஜாவாக வருவார், அப்படியே ஆகட்டும் ஆமேன்.

**ஜீவியத்தை பொறுமையாக்கச் செய்தல் (3:8-10).**

தேவனுடைய நீடிய பொறுமையின் வழிகள் பற்றி பேதுரு தனது வாசகர்களுக்கு நினைவுபடுத்தின போது, எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று நீடியபொறுமையோடே காத்திருக்கிறார் என்று அவர் சொன்ன போது, வாழ்வின் குறுகியத் தன்மையையும் மரணத்தின் நிச்சயத்தையும் நினைவுபடுத்துகிறது. இயேசு கிறிஸ்துவுக்குள், மனுஷர்களை இரட்சிக்கவும், அவர்களுக்கு நித்திய ஜீவனை அருளவும், தேவன் மனுக்குலத்தை வந்தடைந்தார். Seneca என்கிற ஒரு பிரசித்திபெற்ற அரசியல் மேதையும் ஸ்தோயிக்கர் என்ற தத்துவ ஞானியும் பவுலின் சம காலத்தவர்கள். அவர் ரோமாபுரியில் வாழ்ந்து கொண்டிருந்தார். நமக்குத் தெரிந்த மட்டில், கிறிஸ்தவ செய்தியில் அவருக்குப் பரிச்சயம் எதுவுமிருக்கவில்லை, ஆகிலும், Senecaவின் அஞ்ஞான வேதாந்தக் காட்சியால், அவரும் கூட முரண்பாடாய்த் தோன்றும் மெய்யுரையை உணர்ந்தபோது உலக வாழ்க்கை அர்த்தமற்றது என்பதைப் பிரதிபலித்தார்.

ஒருவர் நாளைய தினத்திற்கு உரிமையாளராக இராதபோது, ஒருவர் தன்

*வாழ்க்கையை நிலைநாட்டுவதாகச் சொல்லுவது எத்தனை மதியீனம்! தொலைவில் நாம் அடையப்போகிற நம்பிக்கையை அழித்துப் போடுவது ஓ, எவ்வளவு பைத்தியகாரத்தனம்! "நான்வாங்குவேன், கட்டுவேன், கடன் பட்டாகிலும் பணத்தைச் சேகரித்து, கனத்துக்குரிய பட்டங்களை வெல்லுவேன், பிறகு, என்னுடைய பழையதும் நிறைவானதுமான வருடங்களில் நான் சுலபமான வாழ்விற்கு என்னை ஒப்புக்கொடுப்பேன்," என்று சொல்லலாம். எல்லாமே சந்தேகமாயிருக்கிறது என்று நான் சொல்லும்போது, செழிப்பாய் வாழ்பவர்களும் கூட என்னை நம்புங்கள், எந்த ஒருவரும் எதிர்காலத்துக்குத் தன்னைத்தானே உள்ளுக்கிழுக்கும் எவ்வித உரிமையும் யாருக்குமில்லை ... நாம் ஒரு நெடிய பயணத்துக்குத் திட்டமிடுகிறோம் மேலும் நெடுங்காலமாக அந்நிய கடற்கரைகளில் சுற்றித் திரிந்தபின் - தள்ளிப்போடப்பட்ட - வீடு திரும்புகிறவர்களானோம் ... அப்பொழுது ஒட்டுமொத்தமாக மரணம் பக்கத்தில் நிற்கும்.*[14]

Senecaவின் வார்த்தைகளில் நம்பிக்கையில்லாத தன்மை இருக்கிறது. அதை ஒருவர் வாசிக்கும் போது இரக்கப்படுவார். பேதுருவுக்கும், அவருடைய வார்த்தைகளை விசுவாசிக்கிறவர்களுக்கும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பவர்களுக்கும், அவர் அறிவித்தது என்னவெனில் ஜீவனே பக்கத்தில் நிற்கிறது, மரணமல்ல என்பதே. நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாயிருக்கும்.

## இரண்டாம் வருகையும் ஒழுக்கமும் (3:11-13)

முழு நிறைவான சிறந்த எண்ணங்களே கிறிஸ்தவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியவும் இயேசுவுக்கு ஊழியஞ் செய்யவும் போதுமானது, ஏனெனில் செய்ய வேண்டிய சரியான செயல் இதுவே. தேவனே சிருஷ்டிகர் என்பது போதுமானது. அவர் நசரேயனாகிய இயேசுவிலே தமது அன்பைக் காட்டினார் என்பது போதுமானது சிறந்தது என்னவெனில், அவருடைய கர்த்தத்துவமேயன்றி நாம் கீழ்ப்படிவதற்கு வேறு முகாந்திரம் நமக்கு எதுவுமில்லை. நியாயத்தீர்ப்பும் நித்தியமும் பற்றி நினைப்பூட்டுதலுக்குத் தேவையில்லை.

ஒரு மாம்சத்தின் வலிமையான ஆசைகளை விட்டுக் கொடுத்தலை தேவன் தேவபக்திக்குரிய வாழ்க்கைக்கு ஒரு காரட்டையும் ஒரு குச்சியையும் பயன்படுத்தி தூண்டுதல் செய்கிறார். ஒரு பக்கம், தேவன் அன்பாயிருக்கிறார். தேவன் அன்பின் பிதாவாயிருப்பதால் கிறிஸ்தவர்கள் அவருக்குக் கீழ்ப்படிகிறார்கள், மறுபக்கம், தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். அவர் நியாயாதிபதியாயிருக்கிறார். தேவன் வானத்திலே ஒரு இராட்சதனைப் போல் கையிலே ஒரு தண்டாயுதத்தைப் பிடித்துக் கொண்டு பாவிகள்மேல் பாய்ந்து நையப்புடையாக்கச் செய்வார் என்பது ஒரு கவலை தரும் காட்சியாக இருக்கக் கூடும். அப்படிப்பட்ட கற்பனைகளைக் கொண்டிருக்கும் விசுவாசிகளை விலக்கிய யோவான், "பூரண அன்பு பயத்தைப் புறம்பேதள்ளும்" என்று சொன்னார் (1 யோவான் 4:18). இருந்தாலும், பயம் என்பது கிறிஸ்தவர்களை உள்ளுணர்வடையச் செய்கிற ஒரு சக்தியாக இருப்பதை மறுத்துவிட முடியாது. பாவத்தின் வசீகரிப்புத் தன்மையின் முன் சற்று நின்று நாம் செய்கிற

எல்லாவற்றிற்கும் கணக்கொப்புவிக்கும் படி தேவன் நம் எல்லாரையும் பிடித்து வைத்துள்ளார். என்பதை நினைத்துக் கொள்ள ஒரு காலம் இருக்கிறது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் தேவன் நியாயாதிபதியாயிருக்கிறார் என்று நினைப்பூட்டத் தயங்கியதில்லை. அந்த பாரம்பரியத்தில், பேதுரு கர்த்தருடைய வருகையையும் கடைசி நியாயத்தீர்ப்பையும் சுட்டிக் காட்டினார். இயேசு ஒரு நியாயாதிபதியாக வரவிருப்பதால், கிறிஸ்தவர்களுக்கு பேதுரு நினைப்பூட்டி அவர்கள் பரிசுத்த ஜீவியத்தை ஜீவிக்க வேண்டியதன் அவசியத்தைச் சொன்னார்.

---

**குறிப்புகள்**

[1]Donald Guthrie, *New Testament Theology* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1981), 978. [2]அப்போஸ்தலர்கள் "பன்னிருவர்" என்று நடபடிகள் புத்தகத்தில் (6:2) ஒருமுறை மட்டுமே அழைக்கப்பட்டார்கள், மேலும் பவுலால் ஒருமுறை அழைக்கப்பட்டனர் (1 கொரிந்தியர் 15:5). "பன்னிருவரில்" ஒருவராக இல்லாத பவுலும் ஒரு அப்போஸ்தலனுக்குரிய முழு அதிகாரமும் கட்டளையும் உடையவராயிருந்தார் (கலாத்தியர் 1:1). [3]Michael Green, *The Second Epistle General of Peter and the General Epistle of Jude,* rev. ed., Tyndale New Testament Commentaries, vol. 18 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 138. [4]See Everett Ferguson, *Backgrounds of Early Christianity,* 2d ed. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1993), 232. [5]John R. Clements, "In the Land of Fadeless Day," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [6]Irenaeus *Against Heresies* 5.28.3. [7]Richard J. Bauckham, *Jude, 2 Peter,* Word Biblical Commentary, vol. 50 (Waco, Tex.: Word Books, 1983), 312. [8]Charles H. H. Scobie, *The Ways of Our God: An Approach to Biblical Theology* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2003), 741. [9]Robert Davidson, "Some Aspects of the Old Testament Contribution to the Pattern of Christian Ethics," *Scottish Journal of Theology* 12 (December 1959): 376. [10]In this verse, 2 Peter 3:14, the apostle used the word *amōmētos* ("blameless" or "unblemished"), instead of *amōmos* as he did in 1 Peter 1:19, where he said that Jesus was an "unblemished" lamb. The words are very close and mean essentially the same thing.

[11]*Shepherd of Hermas: Similitudes* 9.14.4. [12]Jessie Brown Pounds, "We Are Going Down the Valley," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [13]2 *Clement* 11.2–5. [14]Seneca *Epistles* 101.